கங்கள் : பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2036 மார்கழி 23 சனிக்கிழமை (07.01.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 41

## தலைநகரில் தமிழ் மக்களுக்கு எதிரான கெடுபிடிகளை ஆட்சேபித்து ஆர்ப்பாட்டம்



கொழும்பு,ஜன.7

இராணுவத்தினர் மற்றும் பொலீஸார் அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி தமிழர்களைக் காரணமின்றி கைதுசெய்வதைக் கண்டித்து நேற்று கொழும்பு ஐந்துலாம்புச்சந்தியில் ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

கடந்த வருட இறுதிநாளன்று கொழும்பில் ஆயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் காரணமெதுவுமின்றி அரசபடைகளால் கைதுசெய்யப்பட்டனர். அதைக் கண்டித்தே மேலக மக்கள் முன்னணியால் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தில், ஆர்ப்பாட்டக் காரர்கள் 'தேசிய இனப் பிரச்சினைக்கு உடனே அரசியல் தீர்வு காண்', 'அவசர காலச் சட்டத்தை பயன்படுத்தி தமிழரை வதைக்காதே', 'யுத்தவாதிகளையும், இனவாதிகளையும் அரசியலிலிருந்து விரட்டு', 'மீண்டும் யுத்தம் வேண்டாம்' - போன்ற சுலோகங்களை கையில் தாங்கி கோஷங்களையும் எழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோகணேசன், சுரேஷ் பிரேமச்சந்திரன், ரவி ராஜ் மற்றும் மேலக மக்கள் முன்னணியின் குமரகுருபரன், கங்கைவேணியன் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் வேட்பாளர்களான சிறிதுங்க ஜயசூரிய, சமில் ஜெயநித்தி, இடதுசாரி முன்னணியின் விக்கிரம பாகு கருணாரத்ன, திருநாவுக்கரசு, முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவர் முஜிபுர் ரஹ்மான் போன்ற முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர். (ஐ-க)

# வடக்குக் கடலில் மீன்பிடிக்க அரச படைகள் தடை விதிப்பு!

## கடற்றொழிலாளரின் குடும்பங்கள் புலிகளின் பகுதிகளுக்கு இடம்பெயர்வு

யாழ்ப்பாணம்,ஜனவரி7

**வடக்குக் கடலில் - பெரும் பிரதேசத்தில் - தமிழ் மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு அரச படைகள் தடைவிதித்திருக்கின்றன.**

**இதனால் தமது அன்றாடப் பிழைப்பை - ஜீவனோபாயத்தை - இழந்துள்ள ஆயிரத்திற்கும் அதிகமான கடற்றொழிலாளர்களின் குடும்பங்கள், தமது தொழிலை மேற்கொள்வதற்காக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை நோக்கி இடம்பெயரத் தொடங்கியிருக்கின்றன.**

மாதகல்துறை, மாதகல் போதித்துறை, மாரீசன்கூடல், குசுமாந்துறை, சம்பில்துறை ஆகிய நான்கு துறைகளில் இருந்தும் தொழிலுக்குச் செல்லும் வலிகாமம் மேற்குப் பிரதேச மீனவர்களுக்கு அங்கிருந்து தொழில் செய்யவேண்டாம் என்ற உத்தரவு கடந்த 28ஆம் திகதி முதல் கடற்படையினரால் விதிக்கப்பட்டது.

இதனால், அப்பிரதேசத்தில் கடற்றொழிலை நம்பியிருந்த 850 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. மேற்படி துறைகளில் கட்டி நின்று தொழிலில் ஈடுபடுத்தப்பட்டு வந்த 275இற்கும் மேற்பட்ட படகுகளும், 75 கட்டு மரங்களும் பயன்படுத்தப்பட முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

இதன் பின்னர் கடந்த வாரம் இதே போன்ற தடை உத்தரவு வல்வெட்டித்துறை ஆதிகோயிலடி மீனவர்களுக்கு வழங்கப்பட்டது.

இப்பொழுது தொண்டைமானாறு முதல்

(14ஆம் பக்கம் பார்க்க)

## உடுவிலில் இளைஞர் சுட்டுக் கொலை!

வலி.வடக்கு,ஜன.7

உடுவில் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்.

உடுவில் ஆலடியைச் சேர்ந்த தங்கரத்தினம் பிரதீஸ்குமார்(வயது24) என்பவரே கொல்லப்பட்டவராவார். வீட்டில் தங்கியிருந்த இவரை வெளியே அழைத்துவந்த நபர்கள் அவரைச் சுட்டுக்கொன்றனர் என்று கூறப்படுகிறது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளைக் கொடிகளை பறக்கவிட உத்தரவு

வலி.கிழக்கு,ஜன.7

நல்லூர், கல்வியங்காடு, இருபாலை ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பருத்தித்துறை வீதியில் இரு மருங்கிலும் உள்ள வீடுகள் மற்றும் கடைகளில் வெள்ளைக் கொடிகளைக் கட்டுமாறு படையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

அந்தப் பகுதியில் பணியில் உள்ள படையினர், வர்த்தக நிறுவனங்கள், வீடுகள் ஆகிய

(14ஆம் பக்கம் பார்க்க)

## நகரில் படைநிலை மீது கிரனேட் வீச்சு! படையினரின் வேட்டுகளால் பதற்றம்!!

யாழ்ப்பாணம்,ஜன.7

யாழ். நகரில் காங்கேசன்துறை வீதியில் வண்ணை சிவன் கோவிலுக்கு அருகில் உள்ள இராணுவக் காவலரணை இலக்குவைத்து நேற்றுப் பிற்பகல் கிரனேட் ஒன்று வீசப்பட்டது என்று படை வட்டாரங்கள் தெரிவித்தன.

கிரனேட் வீசப்பட்டதையடுத்து அந்தக் - காவலரணில் இருந்த படையினர் தீர்த்த துப்பாக்கி வேட்டுக்களால் யாழ். நகரப்பகுதி சிலமணிநேரம் அல்லோலகல்லோலப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் 2.50 மணியளவில் வண்ணை சிவன் கோவிலுக்கு அண்மையில்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவினரோடு அரசியல்துறையினர் சந்திப்பு

கிளிநொச்சி,ஜன.7

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறையினருக்கும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் இடையே நேற்று முற்பகல் சந்திப்பு இடம்பெற்றது.

பளையில் உள்ள அரசியல்துறையின் யாழ். மாவட்ட செயலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதி மாவட்டத் தலைவர் மற்றிவெய்னியொன்பா, கடல் கண்காணிப்புக்குழுவின் பிரதித் தலைவர் லாஸ் பிளேய்மன் ஆகியோரே யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியை சந்தித்துப் பேசினர்.

இளம்பரிதியுடன் ஊடக இணைப்பாளர்

(14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். தினக்குரல் அலுவலகத்தில் நேற்றுப் படையினர் சோதனை

யாழ்ப்பாணம்,ஜன.7

யாழ். நகரில் காங்கேசன்துறை வீதி - கஸ்தூரியார் வீதியை இணைக்கும் இலங்கையன் பதிப்பக ஒழுங்கையினுள் இயங்கிவரும் 'தினக்குரல்' பத்திரிகையின் யாழ். அலுவலகத்தில் நேற்றுப் படையினர் சோதனை நடத்தியிருக்கின்றனர்.

காங்கேசன்துறை வீதியில் வண்ணை சிவன் கோயில் அருகே உள்ள படையினரின் காவலரண்மீது கிரனேட் வீசப்பட்ட சம்பவத்தையடுத்து நேற்றுப் பிற்பகல் 4 மணி

(14ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சை முன்னெடுக்க முழு ஒத்துழைப்பு வழங்குவதற்கு அமெரிக்கா உறுதியளிப்பு

### வாஷிங்ரனில் அமைச்சர் மங்கள தகவல்

வாஷிங்ரன்,ஜன.7

இலங்கையில் ஸ்தம்பித்துப் போயிருக்கும் அமைதி முயற்சிகளை இயன்றளவு விரைவில் முன்னெடுப்பதற்கு முழுமையான, இயலுமான அனைத்து ஒத்துழைப்பையும் வழங்குவதற்கு அமெரிக்கா உறுதியளித்திருப்பதாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்திருக்கிறார்.

அமெரிக்காவிற்கான விஜயமொன்றை மேற்கொண்டுள்ள அமைச்சர் மங்கள சமரவீர, வாஷிங்ரனில் நேற்றுமுன்தினம் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கொண்டலீசா ரைஸ் அம்மையார்ரைச் சந்தித்துப் பேசினார்.

இலங்கையின் அமைதி முயற்சிகள் மற்றும் புதிய அரசாங்கத்தின் திட்டங்கள் குறித்து

(14ஆம் பக்கம் பார்க்க)

## தும்பளை பிரதான வீதியில் வெட்டுக்காயங்களுடன் சடலம்!

வடமராட்சி,ஜன.7

உடல் முழுவதும் பல வெட்டுக்காயங்களுடன் ஆண் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை பருத்தித்துறை தும்பளை பிரதான வீதியில் காணப்பட்டது.

பருத்தித்துறை நகரசபை பொது நூலகத்தின் பணியாளரான தவராசா ஸ்ரீமதன் (வயது 28) என்பவருடைய சடலமே அது என்று பின்னர் அடையாளம் காணப்பட்டது.

மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர் நேற்றுமுன்தினம்கடமைமுடிந்து வீடு திரும்பாத

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்







யாழ்.கே.கே.எஸ். வீதியில் - சிவன்கோயிலுக்கு சமீபமாக அமைந்துள்ள இராணுவக் காவலரண் மீது நேற்று பிற்பகல் வீசப்பட்டதாகக் கூறப்படும் கிரனேட் வெடிக்காத நிலையில் வீதியில் கிடப்பதை முதல் படத்தில் காணலாம். அருகில் இராணுவக் காவலரணையும் வெறிச்சோடிய வைத்தீஸ்வராக் கல்லூரி வீதியினையும் ஏனைய படங்களில் காணலாம். (படங்கள் : பிரபா)

# கரவெட்டி வாசி லண்டனில் கத்தியால் குத்திக்கொலை!

வடமராட்சி,ஜன.7

யாழ்ப்பாணம் கரவெட்டியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் லண்டனில் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்.

லண்டன் விம்பிள்டன் பகுதியில் நீண்ட காலமாக வசித்துவந்த சுப்பிரமணியம் சிவகுமார்(வயது 38) என்பவரே கொலையுண்டவராவார்.

கடந்த வியாழனன்று இனந்தெரியாத நபர்களால் இவர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டிருக்கின்றார் என்று இங்குள்ள அவரது உறவினருக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கரணவாய் கிழக்கு, செம்பாடு தூதாவளையைச் சேர்ந்த - மூன்று பிள்ளைகளின் தந்தையே கொலையுண்டவராவார்.

இவர் விம்பிள்டன் பகுதியில் வர்த்தக நிலையம் ஒன்றை நடத்திவந்தார் என்று கூறப்படுகிறது. இந்தக் கொலை தொடர்பாக லண்டன் பொலீஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ-173-204)

## பாஷையூரில் தேடுதல்

யாழ்ப்பாணம்,ஜன.7

பாஷையூர், புதுக்குடியிருப்புப் பகுதியில் நேற்று மாலை படையினர் தேடுதல் நடத்தினர். இதன்போது வீடு ஒன்றில் சோதனை நடத்திய படையினர் அந்த வீட்டின் உரிமையாளரை விசாரணைக்காக அழைத்துச் சென்றனர். (ஐ-190)

## மன்னாரிலும் நேற்றுத் தேடுதல்

மன்னார் நகருக்கு அண்மையில் உப்புக்குளம் பகுதியில் நேற்று முற்பகல் படையினரும், பொலீஸாரும் தேடுதல் நடத்தினர். பத்துத் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுக் கொண்டுசெல்லப்பட்டனர். எனினும் விசாரணையின் பின்னர் நேற்றுப் பிற்பகலில் அவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர் எனத் தெரியவந்தது. (ஐ-க)

## கடைசி பஸ்கள் புறப்படும் நேரம் மாற்றம்

யாழ்.நகர மத்திய பஸ்நிலையத்தில் இருந்து தினமும் கடைசி பஸ்கள் புறப்படும் நேரம் மாற்றப்பட்டிருப்பதாக வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொதுமுகாமையாளர் அறிவித்திருக்கின்றார்.

குடாநாட்டில் உருவாகி இருக்கும் அசாதாரண சூழ்நிலை காரணமாக நாளைமறுதினம் திங்கள் முதல் யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் சகல பாதைகளிலும் கடைசி பஸ் இரவு 7 மணிக்குப் புறப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-12)

## நேர்முகத்தேர்வுக்கு சமுகமளிக்காதோருக்கு

யாழ்ப்பாணம்,ஜன.7

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்குப் புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப்பரீட்சைக்கு 05.01.2006, 06.01.2006, 07.01.2006 ஆகிய திகதிகளில் அழைக்கப்பட்டு சமுகமளிக்காதவர்கள் எதிர்வரும் 16.01.2006 அன்று காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)






# நவீன சந்தைக் கட்டடத்துக்கு வர்ணம் பூசுவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜன.7

யாழ். நவீன சந்தைக் கட்டடத்தை வர்ணம் பூசி மெருகூட்டுவதற்கு மாநகர நிர்வாகம் தீர்மானித்திருக்கின்றது.

வர்ணம் பூசும் வேலைகள் அடுத்த வாரம் ஆரம்பமாகும் என்று மாநகர ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்திருக்கிறார்.

வர்ணம் பூசும் பணிகளுக்கும், வர்ணம் பூசிய பின்னர் கடைத் தொகுதிகளின் சுவர்களைத் தூய்மையாகப் பேணுவதற்கும் நவீன சந்தை வர்த்தகர்களின் ஒத்துழைப்புக் கோரப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மாநகர ஆணையாளர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சந்தைக் கடைகள் பொதுமக்கள் நலன் கருதியும் வசதி கருதியும் மாநகரசபையால் நிர்மாணிக்கப்படுகின்றன. பொதுமக்களின் சேவைகளைப் பூர்த்திசெய்யும் முகமாகவே ஒவ்வொரு வர்த்தகரும் கடைகளை நடத்துகின்றீர்கள். எனவே எமது பொதுநோக்கு மக்கள் சேவையே. இக்கடைகளை அழகாக வைத்திருப்பதும் எம் இரு சாராரின் பொறுப்பும் கடமையும் ஆகும்.

இந்த வகையில் கடந்த பல ஆண்டுகளாக வர்ணம் பூசப்படாதிருந்த நவீனசந்தைக் கட்டடம் முழுவதற்கும் வர்ணம் பூச நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வேலைகள் அடுத்த வாரம் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடை உரிமையாளர்கள் யாவரும் இக்கடமையில் ஈடுபடுவோருக்கு உதவும் முகமாகத் தங்களது கடை வாயிலின் வெளிப்பக்கமாகவுள்ள விளம்பர இணைப்புகள் யாவற்றையும் அகற்றி ஒத்துழைப்பு வழங்குமாறு தயவாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

எதிர்காலத்தில் வர்ணம் பூசப்பட்ட சுவர்களின் மீது விளம்பரங்கள் ஒட்டப்படுவது தடைசெய்யப்பட்டுள்ளது. தவறின் விளம்பரங்களின் உள்ளூர் முகவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தயவுசெய்து கவனத்தில்கொள்ளவும்.

வர்ணப் பூச்சு வேலை முடிந்ததும் பொது மக்களின் போக்குவரத்தைத் தடை செய்யு[illegible] வகையில் தங்கள் கடையின் பொருள்க[illegible] வைத்து ஒழுங்குமுறைக்கு ஒத்துழைக்குமாறு வேண்டுகின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# தமிழர்கள் கைதைப் படம் பிடித்த படப்பிடிப்பாளர்கள் சிக்கலில்!

கொழும்பு,ஜன.7

கொழும்பில் பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் சுற்றிவளைத்துக் கைதுசெய்யப்பட்டதைப் படம் பிடித்த தமிழ்ப் பத்திரிகைகளின் புகைப்படப்பிடிப்பாளர்களை கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு பொலீஸார் தீவிர விசாரணைகளுக்கு உட்படுத்தியிருக்கின்றனர்.

கடந்த சனிக்கிழமை அதிகாலை பொலீஸாரும், இராணுவத்தினரும் இணைந்து கொழும்பில் நடத்திய பெரும் சுற்றிவளைப்புத் தேடுதலின்போது கிட்டத்தட்ட ஆயிரம் தமிழர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் பொலீஸ் நிலையத்தில் பல மணி நேரம் காத்துக் கிடந்ததை தமிழ்ப் பத்திரிகைகளின் படப்பிடிப்பாளர்கள் தத்ரூபமாகப் படம் பிடித்திருந்தனர்.

தமிழர்கள் பொலீஸ் நிலையங்களில் தவமிருந்த படங்கள் கடந்த ஞாயிற்றுக் கிழமை தமிழ்ப் பத்திரிகைகளில் வெளிவந்திருந்தன.

இந்த நிலையில் இந்தப் படம் வெளிவந்த 'வீரகேசரி' வார இதழின் படப்பிடிப்பாளர் ஜோய் ஜெயக்குமார் நேற்றுமுன்தினம் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டார். கொழும்பு தெமட்டகொடவிலுள்ள குற்றத்தடுப்புப்பிரிவின் அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டே அவர் விசாரிக்கப்பட்டிருக்கிறார்.

பொலீஸ் நிலையத்திற்குள் வந்து எவ்வாறு படம் பிடித்தீர்கள்?, இதற்கு அனுமதி வழங்கியது யார்? என்பன போன்ற கேள்விகளை துருவித்துருவி கேட்டு, இந்த விசாரணை நடத்தப்பட்டிருக்கிறது.

அதேபோல் கைதான தமிழர்களின் படத்தை வெளியிட்ட 'தினக்குரல்' வார இதழின் படப்பிடிப்பாளரையும் விசாரணைக்குட்படுத்த பொலீஸார் நடவடிக்கை எடுத்திருக்கின்றனர் எனக் கூறப்படுகிறது.

கடந்த சனி அதிகாலை கொழும்பில் இந்தத் தேடுதல் நடந்தபோது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இந்தியா சென்றிருந்தார்.

கொழும்பில் நடந்த இந்தத் தேடுதல் குறித்தும் ஆயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் புதுவருடம் பிறக்கவிருக்கும் சமயத்தில் பொலீஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பது குறித்தும் புதுடில்லியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது என்றும் -

அவர் உடனடியாக கொழும்பிலுள்ள மூத்த பொலீஸ் அதிகாரியொருவருடன் தொடர்புகொண்டு விளக்கம் கோரினார் என்றும் -

அப்போது, போதைவஸ்து மற்றும் பாதாள உலகக் கோஷ்டியினரைக் கைது செய்வதற்கான தேடுதலே மேற்கொள்ளப்படுவதாக ஜனாதிபதிக்கு விளக்கம், வியாக்கியானம் கூறப்பட்டது என்றும் - அறியவந்தது.

இந்தநிலையில் இப்போது தமிழ்மக்கள் பல நூற்றுக்கணக்கில் கைதாகித் தடுத்து வைக்கப்பட்டிருப்பதை அம்பலப்படுத்தும் படங்களை எடுத்துப் பிரசுரித்த தமிழ்ப் பத்திரிகையாளர்களை அச்சுறுத்தும் வகையிலான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக தமிழ் ஊடகவியலாளர் சமூகம் விசனம் தெரிவித்திருக்கிறது. (ஐ-க)

# மேஜர் ஜெயானந்தனின் வித்துடல் முழங்காவிலில் நேற்று விதைப்பு

ஜெயபுரம்,ஜன.7

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவி நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் உயிரிழந்த வவுனியா மேற்கு பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் மேஜர் ஜெயானந்தனின் வித்துடல் நேற்று வெள்ளிக்கிழமை முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.

முதலில் மாவீரர் ஜெயானந்தனின் வித்துடல் அஞ்சலிக்கு வைக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம், முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன், கல்விக் கழக உதவிப் பொறுப்பாளர் அருண் மாஸ்ரர், தளபதி லக்ஸ்மன், கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஸ்ரீநாத், மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் டிஸ்கோ ஆகியோரும் பலநூற்றுக்கணக்கான பொதுமக்களும் வித்துடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

பின்னர் முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் வித்துடல் விதைக்கப்பட்டது.

மேஜர் ஜெயானந்தனின் வித்துடல் முழங்காவில் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது என்று நேற்றுமுன்தினம் உதயனின் 2ஆம் பக்கத்தில் செய்தி வெளியாகியிருந்தது. அது தவறு ஆகும்.

நேற்றுமுன்தினம் அஞ்சலி நிகழ்வுகள் மட்டுமே இடம்பெற்று நேற்று வெள்ளிக் கிழமையே வித்துடல் விதைக்கப்பட்டது. (ஐ-291-204)

## மன்னார் பஸ்ஸில் 7 கிலோ வெடிமருந்து

மன்னார்,ஜன.7

மன்னார் முருங்கனில் அதிக சக்திவாய்ந்த வெடிமருந்து தொகுதியொன்றை பொலீஸார் நேற்று அதிகாலை கைப்பற்றியிருக்கின்றனர்.

கொழும்பிலிருந்து மன்னார் நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியார் பஸ்ஸொன்றை இரகசியத் தகவலொன்றின் பேரில் புளியடி இறக்கம் பகுதியில் சோதனை செய்த பொலீஸார், அதிலிருந்து ஏழு கிலோ எடையுள்ள 'சி - நான்கு' ரக வெடிமருந்துப் பொதியைக் கைப்பற்றினர்.

இந்த வெடிமருந்துப் பொதிக்கு எவரும் உரிமை கோராததால் பஸ்ஸிலிருந்த பயணிகள் அனைவரும் இறக்கப்பட்டு, தீவிர விசாரணைகளுக்குட்படுத்தப்பட்டனர்.

பஸ்ஸின் சாரதியினதும், நடத்துநரினதும் வாக்குமூலங்களைப் பொலீஸார் பெற்றிருக்கின்றனர்.

மன்னார் பொலீஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ-க)

## கனரக வாகன அனுமதிக்கான செயன்முறைப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜன.7

கனரக வாகனங்களைச் செலுத்துவோருக்கான (வகுப்பு ஏ) செயன்முறைப் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளதாக யாழ்.செயலக மோட்டார் வாகன போக்குவரத்துக்கிளை வாகனப் பரிசோதகர் கே.மதிவண்ணன் தெரிவித்துள்ளார்.

இதுவரைகாலமும் நடத்தப்பட்ட எழுத்துப் பரீட்சைகளில் சித்தியடைந்த அனைவரையும் யாழ்.செயலக மோட்டார் வாகன போக்குவரத்துக் கிளைக்கு நாளை உரிய நேரத்தில் சமுகமளித்து செயன்முறைப் பரீட்சையில் பங்குபற்றுமாறு அவர் கேட்டுள்ளார். (ஐ-12)

## கரவெட்டி பிரதேச செயலக பணிகள் புதிய கட்டடத்தில்

யாழ்ப்பாணம்,ஜன.7

கரவெட்டி பிரதேச செயலகத்தின் சகல பணிகளும் எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை முதல் புதிய கட்டடத்தில் நடைபெறும் என கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

கரவெட்டி பிரதேச செயலகத்துக்கு மூத்த விநாயகர் கோயிலடியில் நிறுவப்பட்ட புதிய கட்டடம் கடந்த மாதம் திறந்துவைக்கப்பட்டது தெரிந்ததே. அந்தக் கட்டடத்திலேயே பணிகள் ஆரம்பமாகவுள்ளன. (ஐ-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# தமிழர்கள் விடயம் என்பதால் சட்டம் தூங்குகின்றது போலும்!

யாழ். குடாநாட்டில் அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட செம்மணியிலிருந்து டசினுக்கும் அதிகமான மனித எலும்புக்கூடுகள், எச்சங்கள் தோண்டி எடுக்கப்பட்டு ஆறு வருடங்களாகியும் அது தொடர்பான வழக்கில் உரிய நடவடிக்கைகள் இன்னும் எடுக்கப்படாதமை ஏன்? இந்த விவகாரம் இழுத்தடிக்கப் படுவது எதற்காக?

-இவ்வாறு வெகு விசனத்துடன் சட்டமா அதிபர் திணைக் களத்தையும், குற்றப்புலனாய்வுப் பொலிஸாரையும் கடிந்து கொண்டிருக்கின்றார் கொழும்பு சிரேஷ்ட மாஜிஸ்திரேட் குசல சரோஜினி வீரவர்த்தன என்று செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

1995-1996 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், யாழ். குடாநாட்டை இலங்கை அரசின் படைகள் மீளக் கைப்பற்றியதைத் தொடர்ந்து, பல நூற்றக்கணக்கில் அப்பாவித் தமிழ்ப் பொது மக்கள் படையினரால் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமற்போயினர். அவர்கள் அனைவரும் படுகொலை செய்யப்பட்டு விட்டனர் என்பதே பலரதும் கணிப்பு.

அரச படைகள் சட்டத்தைத் தம் கையில் எடுத்து இந்த அப்பாவிகளைப் படுகொலை செய்து புதைத்ததோடு இந் தக் கொடூரம் பற்றிய உண்மைகளும் புதையுண்டு போன வையாகவே அப்போது கருதப்பட்டது. காணாமற்போன பெரும்பான்மையானோர் விடயத்தில் அதுவே உண்மையும் கூட.

ஆனால், கொன்றொழிக்கப்பட்ட பல நூற்றுக்கணக் கானோரில் ஒரு சிலரின் விடயத்திலாவது உண்மை அப்படிப் புதையுண்டு போய்விடவில்லை.

பல நூறு ஏக்கருக்கு மேல் விஸ்தீரணம் உள்ள செம்மணி வெளியில் பாதையை ஒட்டிய சில இடங்களில் அரச படைகளால் கொன்று புதைக்கப்பட்டவர்களின் எச்சங்களை மீட்கும் வாய்ப்புக் கிட்டியது.

இராணுவத்தினரால் கொடூரமாகப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கழுத்துத் திருகிப் படுகொலை செய்யப்பட்ட பாடசாலை மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி, காணாமற்போன அந்த மாணவியைத் தேடிய குற்றத்துக்காக படையினரால் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட கிருஷாந்தியின் தாயார், சகோதரன் மற்றும் அயல்வீட்டுக்காரர் ஆகியோரின் எச்சங்கள் செம்மணியில்தான் மீட்கப்பட்டன. அந்தப்படுகொலைச் சூத்திரதாரிகளில் ஒரு சிலராவது சட்டத்தின் முன் குற்றவாளிகளாகக் காணப்பட்டமை ஆறுதல் தரும் விடயம்.

ஆனால், இப்படிக் காணாமல் போன ஐநூறுக்கும் அதிகமான அப்பாவித் தமிழர்களின் விடயத்தில் சட்டம் எதுவும் செய்ய முடியாமல் மௌனம் காத்து வாளாவிருப்பது தமிழர்களின் விசனத்துக்குரிய விவகாரம்.

அதிலும் அவ்வாறு படுகொலை செய்யப்பட்டு புதைக் கப்பட்ட ஒரு டசினுக்கும் அதிகமானோரின் எலும்புக்கூடுகள், எச்சங்கள் என்பன மீட்கப்பட்டு சுமார் ஒரு தசாப்த காலம் கடந்த பின்னரும் கூட - சட்ட ரீதியான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு ஆறு ஆண்டுகள் கடந்த பின்னரும் கூட -சட்டம் தனது பணியை ஆற்ற முடியாதிருப்பது அல் லது ஆற்ற முடியாது முடக்கப்பட்டிருப்பது பெரு விசனத்துக்குரியதாகும்.

இதையே கொழும்பு பிரதம நீதிவான் சுட்டிக்காட்டியிருக் கின்றார்.

யாழ். குடாநாட்டில் இவ்வாறு டசின் கணக்கானோரின் எலும்புக்கூடுகள், எச்சங்களை ஒன்றாகக் கொண்ட மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டமை செம்மணியில் மட்டுமல்ல.யாழ். நகரின் தென்புறத்தில் யாழ். நகரப் பொது விளையாட்டரங்கில் (துரையப்பா விளையாட்டரங்கில்) உள்ள பவிலியனுக்குப் பக்கத்திலிருந்தும் இருபதுக்கும் அதிகமான ஆட்களின் எலும்புக்கூடுகள், எச்சங்கள் மீட்கப் பட்டு ஏழு ஆண்டுகளாகிவிட்டன.

1988 - 89 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இந்திய அமைதிப் படை அந்த விளையாட்டரங்கு, அதை ஒட்டிய யாழ். கோட்டைப் பகுதிஆகியவற்றில் முகாமிட்டிருந்த சமயம் குடாநாட்டில் அப்படையினரால் கைதாகிப் பின்னர் படுகொலை செய்யப்பட்டவர்களின் எலும்புக்கூடுகளாக அவை இருக்கும் எனக் கருதப்பட்டது. அப்பகுதியில் மேலும் பல டசின் கணக்கானோரின் எலும்புக்கூடுகள் இன்னும் புதையுண்டு கிடப்பதாகவும், அப்பிரதேசம் தோண்டப்படும் போது அவை பற்றிய இரகசியங்கள் அம்பலத்துக்கு வரும் என்றும் கூடக் கூறப்பட்டு வந்தது.

ஆனால், யாழ். விளையாட்டரங்கில் யாழ். நீதிவான் முன்னிலையில் தோண்டி எடுக்கப்பட்ட அந்த எலும்புக் கூடுகள், எச்சங்கள் தொடர்பான விடயம் கூட - அத் தோண்டுதல் இடைநிறுத்தப்பட்ட நிலையில் - மேல் விசாரணை என்ற பெயரில் கிடப்பில் போட்டு மீண்டும் 'புதையுண்டு' அமுங்கிப் போய்விட்டது.

தென்னிலங்கையில் பாடசாலை மாணவர்கள் இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டு புதைக்கப்பட்ட விடயம் சூரிய கந்தவில் அம்பலமான போது எவ்வளவு விரைவாக அவை தோண்டி எடுக்கப்பட்டன, விசாரணைகள் நடத்தப்பட்டன, குற்றவாளிகள் சட்டத்தின் முன்நிறுத் தப்பட்டுத் தண்டனை வாங்கிக் கொடுக்கப்பட்டார்கள் என்பவையெல்லாம் உலகறிந்த விடயங்கள்.

ஆனால், செம்மணியிலும், யாழ்.விளையாட்டரங்கிலும் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டவர்கள் தமிழர்கள் என்பதால் அந்த விடயங்களில் சட்டம் தூங்குகின்றது போலும்.

# பொங்கல் திருநாளையொட்டி வன்னியில் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள்

வட்டக்கச்சி,ஜன.7

தமிழர் திருநாளான தைப்பொங்கலைப் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளுடன் கொண்டாட வன்னியில் பெரும் எடுப்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையினரின் ஒழுங்குபடுத்தலில் அமைக்கப்பட்ட ஏற்பாட்டுக்குழு இதற்கான பணிகளை முன்னெடுத்துவருகின்றது.

இந்த நிகழ்வுகள் தொடர்பாக கலந்துரையாடல்கள், சந்திப்புகள் ஆகியவற்றை இந்த ஏற்பாட்டுக் குழு பரவலாக நடத்தி வருகின்றது.

பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றான மாட்டுவண்டிச் சவாரி எதிர்வரும் 12ஆம் திகதி விசுவமடுவில் இடம்பெறவுள்ளது.

அதைத் தொடர்ந்து கிட்டிப்புள்ளு போட்டி இடம்பெறும்.

தைப்பொங்கல் தினத்தன்று கிளிநொச்சி பொதுவிளையாட்டு மைதானத்தில் அரங்க நிகழ்வு நடைபெறும். அன்று நண்பகல் 12 மணிக்கு தமிழர் பண்பாட்டு மற்றும் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் ஊர்வலத்துடன் நிகழ்வு ஆரம்பமாகும்.

அரங்கநிகழ்வுகளில் தமிழர் பாரம்பரிய இசைநிகழ்வுகளும் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

தொடர்ந்து பொங்கல் விழாவை முன்னிட்டு நடத்தப்படும் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் தெரிவுசெய்யப்படும் சிறந்தவிவசாயிகளுக்கும், பயிர்ச் செய்கையாளர்களுக்கும் பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும். (ஒ-3-405-203)

# சோதனை என்ற பெயரில் வசூல்

யாழ்ப்பாணம்,ஜன.7

மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் இளைஞர்களிடம் சோதனை என்ற பெயரில் பணம் பறிக்கும் சம்பவங்கள் இடம்பெறுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. குடாநாட்டில் சோதனை நடவடிக்கைகள் சமீப காலமாக அதிகரித்துள்ளன. இவற்றின்போது வாகன ஆவணங்களும் பரிசோதிக்கப்படுகின்றன.

வழக்கமாக வாகன சோதனைகளைப் பொலீஸாரே மேற்கொண்டுவந்தனர். ஆனால், பொலீஸார் அல்லாதவர்களும் வாகன ஆவணங்களைச் சோதனையிடுவது இங்கு வழக்கமாகிவிட்டது.

கடந்த புதன்கிழமை முற்பகல் நல்லூர் பகுதியில் இளைஞர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் தலைக்கவசம் அணியாது சென்றார். அவரைத் தடுத்து நிறுத்தி தலைக் கவசம் எங்கே?' எனக் கேட்கப்பட்டது. கிரனேட் தாக்குதல்களையடுத்து மோட்டார் சைக்கிள்களில் செல்வோர் அடையாளம் காணப்படுவதற்காக தலைக்கவசம் அணியத் தேவையில்லை என்று பொலீஸார் கூறியுள்ளனர் என்று மக்கள் மத்தியில் பேசப்படுவதாகவும்- அதனாலேயே தலைக்கவசம் அணிய வில்லை என்றும் இளைஞர் கூ[illegible]னாராம். இதனையடுத்து ஆவணங்களைக் கேட்டபோது எடுத்துவரவில்லை என்றும இளைஞர் சொன்னாராம்.

'ஆவணங்கள் இல்லாவிட்டால் காசு கொடுத்துத் தப்புவதுதானே உங்கள் வழக்கம். அது போல் தாரும்' என்ற தொனியில் இளைஞர் வற்புறுத்தப்பட்டார்

இறுதியாக கையடக்கத் தொலைபேசிக் குரிய பணஅட்டை(கிற்காட்)வாங்கிக்கொடுத்த பின்னரே இளைஞர் செல்ல அனுமதிக்கப்பட்டார் என்று தெரியவந்தது. (க-7)

# உலக வங்கி உதவியுடன் நிர்மாணித்த ஆயிரத்து 635 வீடுகள் இன்று கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.7

உலக வங்கியின் உதவியுடன் வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் கடந்த வருடம் புனரமைக்கப்பட்ட ஆயிரத்து 635 வீடுகள் உரியவர்களுக்கு கையளிக்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தொழிற்பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ்கள், உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு காலை 9 மணிக்கு இடம்பெறும்.

தொடர்ந்து மேற்படி திட்டத்தின் இரண்டாம் கட்டமாக இவ்வருடம் நடைமுறைப்படுத்தப்படவுள்ள 4 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கும் திட்டத்தின் முதலாவது தொகுதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள தெல்லிப்பழைப் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த பயனாளிகளுக்கு முதலாவது பகுதிக் கொடுப்பனவு வழங்கும் வைபவம் காலை 9.30 மணிக்கும் -

வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் கடந்தவருடம் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட ஆயிரத்து 635 வீடுகள் கையளிக்கும் நிகழ்வு முற்பகல் 11 மணி தொடக்கமும் இடம்பெறும்.

யாழ். நெடுங்குளம் கிராமத்தில் புனரமைக்கப்பட்ட வீடுகள் முற்பகல் 11 மணிக்கும் - நல்லூர் கேணியடிக் கிராமத்தில் புனரமைக்கப்பட்ட வீடுகள் நண்பகல் 12 மணிக்கும் -

கோப்பாய், வாதரவத்தைக் கிராமத்தில் புனரமைக்கப்பட்ட வீடுகள் பிற்பகல் 2 மணிக்கும் -

சண்டிலிப்பாய் சாந்தை கிராமத்தில் புனரமைக்கப்பட்ட வீடுகள் பிற்பகல் 4 மணிக்கும் உரியவர்களிடம் கையளிக்கப் படும்.

யாழ். மாவட்ட அரச அதிபர் கேகணேஸ் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் சி.ரங்கராஜா, வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மா[illegible] திட்டப் பணிப்பாளர் செ.பத்மநாதன் ஆகியோர் கலந்துகொள்வர். (3-204)

# மீனவர்கள் மீதான கெடுபிடிகள் கண்காணிப்புக் குழுவின் கவனத்துக்கு!

## கடற்றொழிலாளர் சமாசம் கொண்டுவந்தது

யாழ்ப்பாணம்,ஜன.7

வல்வெட்டித்துறை மற்றும் மாதகல் பகுதிகளைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் மீது கடற்படையினர் மேற்கொண்டுவரும் கெடுபிடிகள் தொடர்பாக வட மாகாணக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்குத் தெரியப்படுத்தியுள்ளது.

மாதகல் பகுதி மீனவர்கள் தொழிலுக்குச் செல்வதற்குக் கடும் நிபந்தனைகளை விதித்துள்ள படையினர், வல்வெட்டித்துறை மீனவர்கள் வடமராட்சி வடக்குக் கடலில் மீன்படிப்பதற்குத் தடையும் விதித்துள்ளனர். இத்தகைய நடவடிக்கைகள் காரணமாக இப்பகுதி மீனவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். கடற்படையினரின் இத்தகைய நடவடிக்கைகள் குறித்து கடற்றொழிலாளர் சமாசம் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும் அரச அதிபருக்கும் உடனடியாக அறிவித்துள்ளது.

இது தொடர்பாகக் கண்காணிப்புக் குழுவினர் வடபகுதிக்குப் பொறுப்பான கடற்படைத் தளபதியைச் சந்தித்துப் பேசியதாகவும் தற்போது குடாநாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாகவே கடற்படையினர் இவ்வாறு நடந்துகொள்வதாக அங்கு கூறப்பட்டதாகவும் சமாச வட்டாரங்கள் தெரிவித்தன.

அடுத்துவரும் தினங்களில் மீனவர்கள் மீதான கெடுபிடிகள் தளர்த்தப்படும் எனவும் - ஆயினும் காங்கேசன் துறைக் கடற்பரப்புக்குள் நுழையும் மீனவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் - கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகளிடம் வடபகுதிக் கடற்படைத் தளபதி தெரிவித்தாகவும் கூறப்பட்டது. (எ-8)

# காணாமற் போனவர்கள் குறித்த முறைப்பாடுகள் தொடர்கின்றன

யாழ்ப்பாணம்,ஜன.7

காணாமற்போன இருவர் தொடர்பாக நேற்றுமுன்தினம் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தற்போது நிலவும் அசாதாரணச் சூழ்நிலையில் பொதுமக்கள் குறிப்பாக இளம் மற்றும் நடுத்தரவயதுடைய ஆண்கள் காணாமற்போனமை தொடர்பான முறைப்பாடுகள் மனித உரிமை ஆணைக் குழுவில் அதிக எண்ணிக்கையில் பதிவு செய்யப்படுகின்றன என்று தெரிவிக்கப் பட்டது.

கடந்த 03.01.2006 அன்று மாலை 5 மணிக்கு அச்சுவேலி, பத்தமேனியில் உள்ள வீட்டில் இருந்து புறப்பட்டவரான பெரியதம்பி சிவயோகநாதன் (வயது -49) என்பவர் இதுவரை வீடுதிரும்பவில்லை என அவரது சகோதரி முறையிட்டுள்ளார்.

இவர் கனடாவில் இருந்து இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாடு திரும்பியிருந்தார். இவருடைய மனைவி மற்றும்பிள்ளைகள் கனடாவில்தங்கியுள்ளனர்.


இவர் காணாமற்போன அதேதினத்தில் நெல்லியடிப்பகுதியில் உள்ள தனியார் கல்வி நிறுவன உரிமையாளரான இராஜரட்ணம் தேவச்சந்திரன் (வயது -29) இதுவரை வீடு திரும்பவில்லை என அவரது மனைவி மனித உரிமை ஆணைக் குழுவில் முறையிட்டுள்ளார். (ஒ-12-14)

## உதயவாக்கு

தீய உள்ளம் படைத்தவர்களையும் நல்லவர்களாக்குவதே ஒரு நல்ல மனிதரின் பண்பு. - ஓர் அறிஞர்.

## நாளை

மார்கழி 24
ஞாயிற்றுக்கிழமை
08.01.2006
திதி: நவமி
பிற்பகல் : 3.21 வரை
நட்சத்திரம் : அச்சுவினி
பிற்பகல் : 05.45 வரை
சுபநேரம் : 09.32 - 11.02
ராகுகாலம் : 05.02 - 06.32
(வாக்கிய பஞ்சாங்கப்படி)



# ஞாலம் போற்றும் ஞானத்தாய்

(சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 81 ஆம் அகவை நிறைவு நாள் இன்றாகும்)

நான்மறை போற்றும் நற்றமிழ் நிலைக்கவும்
வான்தோய் கோபுரம் அமைந்த துர்க்கா
அருள்நதி பாரெங்கும் பரவிப் பாயவும்
இருள்செய் ஆணவம் அருகி ஒளிசெய்
ஞானம் மாந்தர் பெற்று வாழவும்
தானம் தவம்செய் துர்க்க துரந்தரி,
நமசிவாய மந்திரம் நாவிற் படைகொள்
ஐம்பெரும் குரவர் நெறிநின்று அரும்பணி
செம்பொருள் செகம்காண ஆற்றிய
தன்மையால்
வெள்ளிபொன் பவளம் முத்துவிழாக் கண்டு
கள்சொரி கொன்றை மாலை யணியும்
வள்ளல் சிவபெருமான் அருளால் இன்று
எண்பத் தொரகவை காண்கலா நிதியன்னை
தங்கம்மா அப்பாப் குட்டி மாபெரும்
ஞாலம் போற்ற ஞானத் தாய்போல்
ஞாயிறுபோல் புன்னகை பூப்பது
பெண்களின் அருந்தவத்தா லன்றோ மாதோ!

- மாதாஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
கலைப்பீடம் பத்திரிகையியல் டிப்ளோமா (முழுநேரக்)
கற்கைநெறிக்கான அனுமதி - 2006

மேற்படி கற்கைநெறிக்கான அனுமதித் தேர்வு 12.01.2006 காலை 9.30 மணிக்கு நடைபெறும். விண்ணப்பதாரிகள் தங்கள் தங்கள் அடையாள அட்டையுடன் வரவேண்டும்.

பதிவாளர்.
(சி/47250)(32-15-45)



**St. John's College, jaffna**

**Vacancies for Teachers**

Applications are invited from suitable applicants to teach Science / Maths / History / Geography for Grade 6 to 11. The last date for receiving applications is 20th January 2006.

Apply with full bio - data and photocopies of certificates - Diploma / Degrees to :

The Principal,
St. John's College,
Jaffna.

(C/47248)



மணிக்குரலின் மணிவிளக்குகள்
மணிவதனன், ஜெயச்சித்ரா சோதரர்கள்
மறைந்து 11ஆம் ஆண்டு ஞாபகார்த்த விளையாட்டுப் போட்டிகள்
ஒப்பின்ஸ் கரம் + மேசைப்பந்தாட்டம் (TT)
ஆண், பெண் இருபாலாருக்குமான ஒற்றையர் + இரட்டையர் + கலவை ஆட்டம்
விண்ணப்ப முடிவுதிகதி:- 10.01.2006
அணித்தெரிவு:- 11.01.2006
போட்டிகள் ஆரம்பம்:- 12.01.2006 காலை 9 மணி
போட்டி நடைபெறும் இடம்: யாழ் YMCA
விண்ணப்பப்படிவங்களை YMCA இல் பெற்றிடலாம்.
கலைப்போட்டிகள்
❖ பாட்டுக்குப் பாட்டு ❖ தேன் இசை மழை [தனிப்பாடல்]
❖ சிறந்த அறிவிப்பாளர் தெரிவுப்போட்டி
ஆண், பெண் இருபாலாரும் பங்குபற்றலாம்.
தொடர்பு :- மணிக்குரல் விளம்பர சேவை,
V.S.சற்குணன், 52, மாட்டின் வீதி,
யாழ்ப்பாணம். T.P.: 222 7535.
(45084)(32-15-45)
விளம்பர அனுசரணை:
கண்பார்வை தந்திடும் கலங்கரை விளக்கம்,
சொலெக்ஸ் ஒப்ரிக்கல்ஸ்,
இல.516, OPD முன்பாக, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P.: 222 7631.



ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்
டிக்கட் தொடர் இல. 7369224 முதல் 7379640 வரை. சீட்டிழுப்பு இல. 200 திகதி 05-01-2006

வெற்றி எண்கள்
7 6 6 4 5 0 சுப்பர் எண் 09

ஜக்பொட் பரிசு ரூ. 14,772,075/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | 0 | 14,772,075/= | - |
| இடது பக்கமிருந்து முதல் 6 எண்கள் | 01 | 1,000,000/= | 1,000,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 50,000/= | 450,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 91 | 5,000/= | 455,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 905 | 500/= | 452,500/= |
| இடது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 9051 | 50/= | 452,550/= |
| இடது பக்கமிருந்து முதல் 1 எண்கள் | 89694 | 10/= | 896,940/= |
| வலது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/= | 45,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 90 | 1,000/= | 90,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 909 | 100/= | 90,900/= |
| வலது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8959 | 20/= | 179,180/= |
| | | மொத்தம் ரூ. | 4,112,070/= |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/= | 602,600/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 4,714,670/-

ரூ. 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| குருணாகல் | 7375587-9-02 |
| அம்பாறை | 7373030-6-71 |
| திருகோணமலை | 7374507-2-23 |
| இரத்தினபுரி | 7375094-1-95 |
| மட்டக்களப்பு | 7373948-4-89 |
| காலி | 7372491-3-85 |
| அம்பாந்தோட்டை | 7373600-2-72 |
| கண்டி | 7376914-6-54 |

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. 15,023,725/-

தொடர் இல. 6456437 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2006 ஜனவரி 09 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.


# வெள்ளவத்தைப் பகுதியில் துப்பாக்கிச் சூடு

வெள்ளவத்தைப் பகுதியில் வான் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்த நிலையில் கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வெள்ளவத்தைக்கும் தெஹிவளைக்கும் இடைப்பட்ட பகுதியில் நேற்றுமுன்தினம் இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது காயமடைந்தவர் டாக்டர் இராஜேந்திரன் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவருடன் ஜே.வி.பி. கட்சியின் முன்னாள் தலைவர் ரோஹன விஜேவீரவின் மைத்துனரான டாக்டர் சரத் பெர்னாண்டோவும் பயணம் செய்தார் எனத் தெவிக்கப்பட்டது. (க)

## மணல் விநியோகம் இன்று

யாழ்ப்பாணம்,ஜன.7

வடமராட்சிகிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனத்தில் புதன்கிழமை குறிப் பிட்ட மணல் அனுமதிப்பத்திரம் உடைய அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு இன்று சனிக்கிழமை மணல் விநியோகம் மேற்கொள்ளப்படும் என்று நிறுவனத்தின் நிர்வாகம் தெரிவித்துள்ளது. (3-202)

## திருவாசகமுற்றோதல்

யாழ்ப்பாணடும்,ஜன.7

சண்டிலிப்பாய் கல்வளைப் பிள்ளையார் ஆலய திருவாசக முற்றோதல் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

விசேட அபிசேக ஆராதனைகள் இடம் பெற்று மாணிக்கவாசக சுவாமிகள் வீதியுலா வருவார். (3-13)

★ ★ ★

வடமராட்சி,ஜன.7

தென்புலோலி உபய கதிர்காமம் தான் தோன்றி ஸ்ரீ சக்கர சண்முகர் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி முதல் திருவாசக முற்றோதல் இடம் பெறும். (3-173)

★ ★ ★

திருநெல்வேலி பழம் கிணற்றடிப் ஸ்ரீ விநாயகர் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிமுதல் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா தலைமையில் திரு வாசக முற்றோதல் நடைபெறவுள்ளது. (எ-13)

## பூநகரியில் பேரணி

பூநகரி,ஜன.7

திருகோணமலையில் 5 மாணவர்கள் படையினரால் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து நேற்று பூநகரிப் பிரதேசத்தில் மாணவர்களால் கண்டனப் பேரணி நடத்தப்பட்டது.

பூநகரி மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்பேரணியில் 500 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இரு வழிகளில் வந்த பேரணியினர் பூநகரி வாடியடிப் பகுதியில் ஒன்று சேர்ந்தனர். அங்கு கண்டனக் கூட்டம் இடம்பெற்றன.

இறுதியில் உயர்தர வகுப்பு மாணவர்களால் கிளிநொச்சி மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் மகஜர் கையளிக்கப்பட்டது. (ஒ-204-403)

# நல்லூர் மத்தியஸ்தர் சபைக் கூட்டம்

வலி.வடக்கு,ஜன.7

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மத்தியஸ்தர் சபை நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முதல் தடவையாக கூடவுள்ளது.

யாழ்ப்பாணம், கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் தவிசாளர் எஸ்.ரி. பத்மநாதன் தலைமையில் இக்கூட்டம் இடம்பெறவுள்ளது.

பிணக்குகளைப் பேசித் தீர்க்கவென அமைக்கப்பட்ட மத்தியஸ்தர் சபையின் முன்னிலையில் நல்லூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதியைச் சேர்ந்த மக்கள் தமது பிணக்குகளை எழுத்துமூலம் சமர்ப்பித்துத் தீர்வு பெறுவதற்கு நடவடிக்கையெடுக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மத்தியஸ்தர் சபையானது ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இப்பாடசாலையில் கூடவுள்ளதாகவும் -

பொதுமக்கள் சபை கூடும் நாளில் முற்பகல் 10.30 மணிக்கு முன்னர் தமது கோரிக்கைகளை எழுத்து மூலம் தவிசாளரிடம் 5 ரூபா முத்திரையொட்டி சமர்ப் பிக்க வேண்டுமென வும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஒ-86)


விற்பனைக்கு
குவாட்டா எஞ்சின் 5000 V மோட்டார் (டீசல்) விற்பனைக்குண்டு.
தொடர்பு: நா.சிவசுந்தரம்
சோமசுந்தரம் வீதி.
ஆனைக்கோட்டை.
T.P.: 0776160251
(45085)(32-30-15-45)



**S.LINGAM TIMBERS**
**Seles Center**
சகலவிதமான அளவுகளிலும் வேம்பு, முதிரை, பாலை, மவுக்கிளி, கிராண், டீஸ், கம்பஸ் மற்றும் கட்டடப் பொருள்கள் கற்கள், மணல், சிமெந்து, கொங்கிறீட் கற்கள் என்பன மலிவான விலையில் விற்பனையாகிறது.
குறிப்பு:- வியாபாரிகளுக்கு முதிரைப் பலகைக்கு விசேட கழிவு வழங்கப்படும்.
தலங்காவல் பிள்ளையார் கோயிலடி,
அம்மன் வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். தொ.பே: 077 3151568.
(45087)(32-17-34)



ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்
ஊர்காவற்றுறை
லொறிகள் விற்பனை
சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் நல்ல நிலையில் உள்ள பின்வரும் இலக்கங்களைக் கொண்ட இரு லொறிகள் விற்பனைக்காக எம்மிடம் உள்ளன. கேள்விகோரல் கடிதமூலம் குறிப்பிட்ட லொறிகளை விற்பனை செய்ய உள்ளோம். தேவையானவர்கள் தலைமை அலுவலகத்தில் லொறிகளைப் பார்வையிடலாம். கேள்வி கோரல் கடிதங்களை 25-01-2006 ஆம் திகதிக்கு முன்னர் நேரிலோ பதிவுத் தபாலிலோ கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.
1. ஸ்கூசு லொறி இல. 27/1380
2. லெய்டன் (கொமட் சுப்பர்) இல. 43/8882
பொது முகாமையாளர்.
தொ.இல.021 222 6160.
(சி/47251)(26-32-15-45)



இறைஜோதியில் சங்கமித்த ஆண்டு இரண்டாம்...



முத்தையா அழகரத்தினம்
அழகரத்தினம் என அழைக்கப்பட்ட சுவாமி அழகானந்த ஜோதி அவர்கள்
தோற்றம் 20-10-1922
ஜோதியில் சங்கமம் 30-12-2003

இறைஜோதியில் சங்கமித்து
ஆண்டு இரண்டு ஓடி மறைந்தாலும்
என்றும் எம் உள்ளத்தில்
வாழ்ந்து கொண்டிருக்கும் இறைவனே
உன் பாதம் வணங்குகின்றோம்.

மூத்த விநாயகர் கோயிலடி,
ஆனைக்கோட்டை.
குடும்பத்தினர்.
(45085)(32-15-45)



அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

எங்கள் குடும்பத் தலைவராய் இருந்து
06.12.2005 அன்று இறையடி சேர்ந்த எங்கள்
குடும்பத் தலைவர்
அமரர் செல்லத்துரை அதிஸ்டரட்ணம்
(பொபி)
அவர்களின் வீட்டுக் கிருத்தியம் இன்று
(07.01.2006) சனிக்கிழமை முற்பகல் 10
மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும்.
அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும்
மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும்
வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.



தோற்றம் 29.05.1940
மறைவு 06.12.2005

முதலியார் மகேசன் வீதி,
குடும்பத்தினர்.
(45081)(-32-15-45)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயதொழில் ஆரம்பிப்பதற்காக உபகரணங்கள் வழங்கப்பட்டன

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனத்தில் நடத்தப்பட்ட மேசன், தச்சுத் தொழில்களுக்கான பயிற்சி நெறிகளைப் பெற்றவர்களுக்கு சுயதொழில்




மேற்கொள்வதற்கான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த உபகரணங்களை வழங்கும் நிகழ்வு கடந்தமாதம் இடம்பெற்றது.

நிகழ்வில் சுவிஸ் அரசின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கட்டுமான முகாமையாளர் பியாட்கிளையின் மாணவர்களுக்கான உபகரணங்களை வழங்கினர்.

தொழில்நுட்பக் கல்லூரி இயக்குநர் எ[illegible] ஆர்.ஜீ.ஹீல் தலைமையி[illegible] இந்நிகழ்வில் [illegible] பரீட்சை, எழுத்து[illegible]டசை என்பவற்றின் மூலம் முதல் மூன்று இடங்களையும் பெற்றுக்கொண்டவர்களுக்குப் பணப்பரிசில்களும் வழங்கப்பட்டன.

சுவிஸ் அரசின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின்கீழ் இயங்கும் சர்வதேச மனிதாபிமான அமைப்பின் அனுசரணையுடன் இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

(3-203)

# காரைநகரில் கணனிப் பயிற்சி நிறைவு



காரைநகர் கணனிப் பயிற்சி நிலையத்தின் இரண்டாவது வருட நிறைவு விழாவும் மாணவர்களுக்கான பெறுப்பேற்று அறிக்கை வழங்கும் நிகழ்வும் அண்மையில் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக சமூகவியல்துறைத் தலைவர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார்.



கௌரவ விருந்தினராக இந்நிகழ்வில் கலந்துகொண்ட யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் முகாமையாளர் சி.என்.மகிவதனன் கணனிக் கற்கைநெறியை நிறைவு செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவித்தார்.

(3-203-73)

# விவசாய நடவடிக்கைகளுக்கு ஜி.ரி.இசற் வன்னியிலும் உதவி

ஜி.ரி.இசற் வடபுனரமைப்புத் திட்டத்தின் ஒரு நிகழ்ச்சித் திட்டமான புதிய உணவு உதவித் திட்டத்தினூடாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் யுத்தத்தினால் மிகவும் பாதிக்கப்பட்ட சில கிராமங்களில் விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்தவும் உணவு உற்பத்தியை அதிகரிக்கும் செயற்பாடுகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் பிரதேச செயலகங்கள், கிராம சேவகர் பிரிவு, கமக்கார அமைப்புகள் ஊடாக பல உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

வறிய மக்களுக்கு உணவுப் பொருள்கள், உழவு இயந்திரங்கள், இழுவைப் பெட்டிகள், இரும்பு கலப்பைகள் ஆகியவற்றை வழங்குவதற்காக, மருதங்கேணி பிரிவில் போக்கறுப்பு, நித்தியவெட்டை, செம்பியன்பற்று ஆகிய கமக்கார அமைப்புகளும் கரைச்சிப் பிரிவில் தட்டுவான் கொட்டி கமக்கார அமைப்பும் யாழ்ப்பாணத்தில் நெடுந்தீவு கமக்கார அமைப்பும் தெரிவுசெய்யப்பட்டு உழவு இயந்திர தொகுதிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு தட்டுவான்கொட்டி கிராமத்திலும் மருதங்கேணிப் பிரிவுக்கான நிகழ்வு தாளையடியிலுள்ள திட்ட அமுலாக்கல் ஒருங்





கிணைப்புச் செயலகத்திலும் நடைபெற்றது. இதில் செயலகப் பிரதிநிதிகள் கமக்கார அமைப்புக்களின் உறுப்பினர்கள் முன்னிலையில் ஜி.ரி.இசற் வடபுனரமைப்புத் திட்டத்தின் முதன்மை ஆலோசகரினால் கமக்கார அமைப்பின் தலைவர்களிடம் கையளிக்கப்பட்டது.

நெடுந்தீவுக் கமக்கார அமைப்பின் சம்மேளனத்துக்கான உழவு இயந்திரம் வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்துடன், மேலும் சில கமக்கார அமைப்புகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள், தெளிகருவிகள், நீர் இறைக்கும் பட்டைகள் என்பன வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விவசாயிகளுக்கு விதை நெல், உணவுடனான வேலைத் திட்டத்தினூடாக வடிகால், வீதிகள் புனரமைப்பு என்பவற்றோடு நீர்இறைக்கும் இயந்திரங்கள், தெளிகருவிகள், நீர் இறைக்கும் பட்டைகள் என்பனவும் வழங்கப்பட்டன.

இப்பகுதிகளில் செயல் இழந்திருந்த கமக்கார அமைப்புகள் புனரமைக்கப்பட்டு கமநல சேவை திணைக்களத்தினூடான பதிவுகள் புதிப்பிக்கப்பட்டு மீண்டும் செயலூக்கத்துடன் இயங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன் ஒரு பகுதியாகவும் வசதி குறைந்த விவசாயிகளின் முயற்சிகளுக்கு வலுவூட்டும் முகமாகவும் இவர்கள் உறுப்புரிமை கொண்டுள்ள கமக்கார அமைப்புகள் சிலவற்றுக்கு


(3)

# நாள்காட்டி தயாரிப்பில் வளர்ந்து வரும் யுனிலங்காஸ்

2006ஆம் ஆண்டு நாள்காட்டிகள் விற்பனைக்கு வந்துள்ளன. வர்த்தக நிறுவனங்கள் வாடிக்கையாளர்களுக்கு கலண்டர்களை அன்பளிப்புச் செய்வதில் ஈடுபட்டுள்ளன. பலன்களை அறியும் நாள்காட்டிகள் இல்லந்தோறும் வந்துசேர்கின்றன.

பஞ்சாங்க நாள்காட்டிகளை அச்சிட்டு வெளியிடும் நிறுவனங்கள் இந்தப் பணியில் தீவிரமடைந்துள்ளன. இந்த வரிசையில் வெளிவந்துள்ளது 'யுனிலங்காஸ்' சித்திரக் கலண்டர்கள் (நாள்காட்டிகள்).

இவ்வாண்டு புதிய நவீன படைப்பில் இல்லங்கள் சிறக்க உருவாக்கப்பட்டு வெளிவந்துள்ளன 'யுனிலங்காஸ்' நாள்காட்டிகள்.




கிறிஸ்மஸ், புத்தாண்டு முதல் தைப்பொங்கல் வரை கலகலப்பாக விற்பனையாகும் நாள்காட்டிகளில் முன்னணியில் 'யுனிலங்காஸ்' கலண்டர்கள் இவ்வாண்டு நவீன வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளன.

இம்முறை வெளிவந்துள்ள யுனிலங்காஸ் பஞ்சாங்க நாள்காட்டிகள் புதிய வடிவில் கலக்குகின்றதை அவதானிக்க முடிகிறது.

சுபநேரங்கள், ஆலய உற்சவங்கள், அறிஞர்கள், தேசத் தலைவர்களது நினைவு தினங்கள், பெருநாள்கள், விரத நாள்கள், திதிகள், சமய தினங்கள் போன்ற பல்வேறு நிகழ்வு அம்சங்களைக் குறிக்கும் வடிவமைப்புடன் தனித்தனியாக இவற்றைத் தரம் பிரித்துப் பார்க்கும் வகையில் பல்நிற வடிவில் அழகுற அமைக்கப்பட்டுள்ளன யுனிலங்காஸ் நாள்காட்டிகள்.

சிறப்பு நாள்கள், பொருத்தமான தினங்கள், புனித காலங்கள் போன்றவற்றைப் பார்த்துக் கணக்கிடக் கூடிய வர்ண வடிவமைப்பில் அமைந்துள்ளன 'யுனிலங்காஸ்' கலண்டர்கள்.

இல்லங்கள் தோறும் பக்திப் பரவசம் சேர்க்கும் வகையில் தெய்வீகப் படங்களைப் பல்வேறு வடிவில் தாங்கி வெளிவந்துள்ளன. 'யுனிலங்காஸ்' கலண்டர்கள். காலை எழுந்ததும் கண்கவரப் பார்த்து மகிழ இந்தப் பஞ்சாங்க நாள்காட்டிகள் வகை செய்கின்றதை உணரலாம்.

இதில் நாள், கோள் விவரங்களைத் தனித்தனியாகப் பார்க்கும் வகையில் [illegible]லர் வடிவில் அமைந்துள்ளது சிறப்பம்சமே எனலாம்.

மற்றைய வெளியீடுகளை விட சோதிட நம்பிக்கை உள்ளவர்களின் விருப்பத்திற்கு ஒவ்வொரு நாளும் இராசிப் பலன்கள் உள்ளடக்கியது மிகப் பொருத்தமான நாள்காட்டி.

ஒவ்வொரு நாளும் மகிழ்ச்சி தரும் நற்சிந்தனைகள், தெய்வீக கடாட்சம் நிறைந்த அருள் வாக்கியங்கள், திருக்குறள், மணிமொழிகள், அறிவுதரும் வகையில் யுனிலங்காஸ் நாள்காட்டிகள் அமைந்துள்ளன. தமிழ் கூறும் நல்லுலகம் போற்றும் வகையில் புதிய அம்சங்களுடன் இந்த நாள்காட்டிகள் பெயர் கேட்டு வாங்க அல்லது தரம் பார்த்து வாங்க அமைந்துள்ளது வரவேற்கத்தக்கதே.

தமிழர் கலாசார நிகழ்வுகள் துல்லியமாகத் தெரிந்துகொள்ள, சமய சம்பிரதாயங்களை இலகுவாகக் கைக்கொள்ள வழிகாட்டியாய் துணை நிற்கின்றது 'யுனிலங்காஸ்' பஞ்சாங்க நாள்காட்டிகள். இச்சேவை மக்கள் மனதை கவர்வது குறிப்பிடத்தக்கது.

- சக்திபாலன்.

# 2006இல் உங்கள் இராசி எப்படி?

## விருச்சிகம்

*விசாகம் 4, அனுஷம், கேட்டை*

எந்தச் சூழலிலும் கலங்காத உள்ளம் படைத்த விருச்சிக ராசி அன்பர்களே!

புத்தாண்டில் சிரமங்கள் விலகி இனிமை தரும் நிகழ்வுகளைப் பெறுவீர்கள். உங்களின் புதிய செயல்திட்டங்களை நிறைவேற்றத் தேவைப்படும் நிதி உதவிகளைத் தாராளமாகப் பெறுவீர்கள். பூமி, மனை போன்ற புதியசொத்துக்களை வாங்கும் சமயங்களில் அதன் தன்மைகளை நன்கு பரிசீலனை செய்து வாங்குவதால் நன்மை உண்டு. உடல் நலம் ஆரோக்கியம் நிறைந்த தன்மையில் இருக்கும். எதிரிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த தைரிய மனநிலையும் உறுதியான செயல் திட்டமும் வேண்டும். கணவன்- மனைவி ஒற்றுமையில் சற்று பிரச்சினை இருக்கவே செய்யும். நண்பர்களின் சிபாரிசுகளை நன்கு ஆராய்ந்து செயல்படுத்தலாம். தந்தை வழி உறவினர்கள், தங்களால் இயன்ற அளவு உதவிகளை மட்டுமே செய் வார்கள். தந்தையின் உடல்நலத்தில் கவனம் செலுத்துவதால் அவரது உடல்நலம் ஆரோக்கிய நிலையில் இருக்கும். சுகவாழ்க்கையை மறந்துவிட்டு, தொழில் முன்னேற்றத் திற்கான சிந்தனைக்கு முக்கியத்துவம் தருவீர்கள்.

இளமைக்கால நண்பர்கள் உங்களை நாடிவரும் இனிய சந்தர்ப்பங்கள் ஏற்படும்.

குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சிகள் நடக்கும். வெளியூர் சம்பந்தமான தொழில் தொடர்புகளால் கடந்த காலங்களில் பெற வேண்டிய நன்மைகள் தாராளமாக வந்து சேரும். வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கான முயற்சி செய்பவர்களுக்கு தகுதிக்கேற்ற பணி கிடைக்கும்.

**தொழிலதிபர்கள்:** மருத்துவமனை நடத்துபவர்கள், கோதுமை பண்ட தயாரிப்பாளர்கள் சற்று பிரச்சினைகளைச் சந்திக்க நேரலாம். பட்டாசு, தீப்பெட்டி வகைகள், மின் சாதனங்கள், அடுப்பு, சமையல் எரிவாயு, மெழுகுவர்த்தி உற்பத்தி செய்பவர்கள் வளம் தரும் வகையிலான உயர்வு நிலையைப் பெறுவார்கள். எக்ஸ்ரே கருவிகள், பிலிம், மருத்துவ உபகரணங்கள், மருந்து தயாரிப்பாளர்களுக்கு கூடுதல் வாய்ப்புக் கிடைத்து, வருமானம் அதிகரிக்கும்.

**வியாபாரிகள்:** தங்க, வெள்ளி நகை வியாபாரி களுக்கு சற்று சுமாரான ஆண்டு தான். பாத்திரம், மின்சார உப கரணங்கள், வாகன உதிரிப்பாகங்கள், பிளாஸ்டிக் பொருள்கள் வியாபாரம் செய்பவர்கள், பிறர் வியக்கும் முன்னேற்றம் பெறுவார்கள். ஆடைகள், [illegible] விரிப்புகள், தோல் [illegible] யாளர்கள் தொழில் முன்னேற்றம் காண்பார்கள். துணி வியாபாரம், நகைக்கடை, பூ, காய்கறி, தளபாடங்கள் , உணவக, வியாபாரிகள் புதிய வாடிக்கையாளர்கள் கிடைக்கப்பெற்று வளம் நிறைந்த வாழ்வு பெறுவார்கள். பலசரக்கு வியாபாரம் செய்பவர்கள் கூடுதல் பணவரவு கிடைக்கப் பெறுவார்கள்.

**பணியாளர்கள்:** அரசு மற்றும் தனியார் துறையில் பணிபுரிபவர்கள் தங்கள் பணியில் எந்தக் குறுக்கீடுகளும் வராத இனிய சூழ்நிலை பெறுவார்கள். நிர்வாகத்தின் வழிகாட்டல்களைக் கூடுதல் கவனத்துடன் செயல்படுத்தி நற்பெயரும், சலுகைகளும் பெறுவார்கள். சக ஊழியர்கள் ஒத்துழைப்பு தருவர்.

**பெண்கள்:** அரசு மற்றும் தனியார் துறையில் பணிபுரியும் பெண்கள் தங்கள் பணியில் சிரமங்கள் எதுவும் குறுக்கீடு செய்யாத சுமூகமான நிலையைப் பெறுவார்கள். தங்கள் திறமை களை முழுவதும் பயன்படுத்தி பணியின் இலக்கைப் பூர்த்தி செய்து நிர்வாகத்திடம் நற்பெயர் பெறுவார்கள். சக ஊழியர்கள் அன்பு நிறைந்த த[illegible]மையுடன் நடந்து உங்கள் பணிக்கு மேலும் ஊக்கம் சேர்ப்பார்கள். கடந்த காலத்தில் ஏற்பட்ட பணக் கொடுக்கல், வ[illegible]ங்கல் நடவடிக்கைகளில் சுமூகமான [illegible] தொழில் புரியும் பெண்கள் தங்கள் உற்பத்திப் பொருள்களை சிறந்த தரத்துடன் தயார்செய்து சிறப்பிடம் பெறுவார்கள்.

கூட்டுத் தொழில் செய்யும் பெண்கள் நம்பக்கை நிறைந்த மனதுடன் செயல்பட்டு முன்னேற்றம் காண்பர். குடும்ப நிர்வாகம் கவனிக்கும் பெண்கள் பொருளாதார சிக்கனத்தைக் கடைபிடித்து எதிர்கால தேவைகளை வரையறை செய்வார்கள். ஆடை, ஆபரண சேர்க்கை தகுதிக் கேற்ப உண்டு. குடும்ப வாழ்வு சிறப்புடன் திகழும்.

**மாணவர்கள்:** மருத்துவம், சமையற்கலை, இயந்திரங்கள் இயக்குதல், மின்சாதன வடிவமைப்பு, ஆய்வுகூடங்கள், அலுவலர் இலத்திரனியல் பொருள்களை பழுதுநீக்குதல், விவசாயம், விளையாட்டுத்துறை ஆகியதுறை சார்ந்த கல்வி பயிலும் மாணவர்கள் தங்கள் படிப்பில் ஒருமுக மனப்பான்மையுடன் செயல்பட்டு சிறந்த தர தேர்ச்சியும் குடும்பத்தினரின் பாராட்டுகளையும் பெறுவார்கள். வீடியோ, புகைப்படம் மற்றும் ஆசிரியர் பயிற்சி, அலுவலக நிர்வாக பயிற்சி பெறும் மாணவர்கள் தங்கள் திறமைகளை நன்கு வளர்த்துக் கொண்டு சிறந்த மாணவனாகத் தேர்வு பெறுவார்கள்.

ஆரம்ப, உயர்நிலை மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குவர். சக மாண வர்களின் உதவி உண்டு. தெய்வ நம்பக்கை யும் சமூக சேவை ஈடுபாடும் புதிய வளர்ச்சி பெறும். சுற்றுலாப் பயணங்கள் மனம் மகி ழத்தக்க விதமாக அமையும்.

(ஏனைய இராசிகளுக்கான பலன்கள் தொடர்ந்து வெளிவரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கத்தி தீட்டிய போது சாணைக்கல் உடைந்து ஒருவர் படுகாயம்

தென்மராட்சி,ஜன.7

இயங்கிக் கொண்டிருந்த இயந்திரத்தின் சாணைக்கல் உடைந்து தெறித்ததில் அவ்விடத்தில் நின்றவரின் கை முறிந்தது.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி டச்வீதியில் உள்ள வாகனம் பழுது பார்க்குமிடத்தில் இடம்பெற்றது.

சாவகச்சேரி கெருடாவிலைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை பரமநாதன் (வயது 43) என்பவரே இச்சம்பவத்தில் கை முறிந்து சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

கத்தியொன்றினை சாணை தீட்டிய போதே சாணைக் கல் உடைந்து தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

# படையினரின் சோதனை நடவடிக்கையால் தீவகத்தில் ஆசிரியர்கள் பணிக்குத் தாமதம்

## இதனால் கல்விச் செயற்பாடுகள் பின்னடைவு

யாழ்ப்பாணம்,ஜன.7

யாழ்ப்பாணத்தில் இருந்து தீவகத்துக்குத் தினமும் பணிக்காகச் சென்றுவரும் ஆசிரியர்கள் படையினரின் சோதனை நடவடிக்கைகளால் தாமதமாகவே பாடசாலைகளைச் சென்றடைய நேரிடுவதாகக் கூறப்படுகிறது. இதனால், தீவகத்தில் கல்விச் செயற்பாடுகள் பாதிப்படைவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தீவக வலயப் பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள் தினமும் யாழ்.நகரிலிருந்து சென்றே கடமையாற்றி வருகின்றனர். இவர்களில் வடமராட்சி உட்பட பிற இடங்களில் இருந்து யாழ்.நகரம் வந்து அங்கிருந்து தீவகம் செல்வோரும் அடங்குவர்.

இவர்கள் பயணிக்கும் வாகனங்கள் பண்ணை, அல்லைப்பிட்டி, மடத்துவெளி, குறிகட்டுவான் போன்ற இடங்களில் படையினரால் சோதனையிடப்படுகின்றனர். இந்தச் சோதனை நடவடிக்கைகளின் போது வாகனங்களில் இருப்பவர்கள் அனைவரும் கீழே இறக்கப்பட்டு அடையாள ஆவணம், பொதிகள் சோதனையிடப்பட்டே பயணத்தைத் தொடர அனுமதிக்கப்படுகின்றனர். இவ்வாறு பல இடங்களில் இடம்பெறும் சோதனை நடைமுறைகளின் பின்னர் குறிப்பிட்ட நேரம் தாண்டியே பாடசாலைகளை ஆசிரியர்கள் சென்றடைய நேரிடுகின்றது. அத்துடன், சோதனை நடவடிக்கைகள் காரணமாக ஆசிரியர்கள் மன உளைச்சலுக்கு ஆளாவதால், அவர்களால் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபாடுகாட்ட முடியாதுள்ளதாகவும் கூறப்படுகின்றது. ஆசிரியர்கள் மட்டுமன்றி அரச ஊழியர்கள் பொதுமக்கள் என பல தரப்பினரும் சோதனை நடவடிக்கைகளால் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தீவக வலய செயலாளர் எஸ்.கே.சண்முகலிங்கம் கருத்துக் கூறுகையில், ஆசிரியர்கள் தாமதமாக வருவதால் பாடசாலைகளும் உரிய நேரம் கடந்தே ஆரம்பிக்கப்படுகின்றன என்றும் - இதனால், மாணவர்கள் வரவும் குறைந்து காணப்படுவதாகவும் -கவலை தெரிவித்தார். (ஒ-ரி)

# சீருடை அணிந்து வந்தவர்கள் வீட்டை உடைத்துக் கொள்ளை

யாழ்ப்பாணம்,ஜன.7

மானிப்பாயில் உள்ள வீடொன்றுக்குள் நள்ளிரவு நேரம் சீருடையில் உட்புகுந்தோர் பெறுமதி மிக்க பொருள்களைக் கொள்ளையடித்துச் சென்றனர்.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு குறிப்பிட்ட வீட்டைச் சேர்ந்தவர்கள் விசேட நிகழ்வு ஒன்றிற்காக உறவினரின் வீட்டுக்குச் சென்றிருந்தனர். அன்று நள்ளிரவு சீருடை அணிந்த சிலர் வீட்டின் கதவை உடைத்து உட்புகுந்துள்ளனர். அயலவர்கள் இந்தச் சம்பவத்தைக் கண்டுள்ளனர். ஆனால், அச்சம் காரணமாக அவர்கள் வெளியில் வரவில்லை.

இதனைச் சாதகமாகப் பயன்படுத்திய கொள்ளையர்கள் மோட்டார் சைக்கிள் உட்படப் பெறுமதியான பொருள்களைக் கொள்ளையடித்துச் சென்றனர். இது தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது. (ஒ-12-14)

# புங்குடுதீவு, நெடுந்தீவு பகுதிகளில் வீதியோர மரக்கிளைகள் தறிப்பு

## பாதுகாப்புக் கருதி படையினர் நடவடிக்கை

நல்லூர்,ஜன.7

புங்குடுதீவு, நெடுந்தீவுப் பகுதிகளில் படையினர் பிரதான வீதியோரங்களில் காணப்படும் மரக்கிளைகளைத் தறித்தும் பற்றைகளை வெட்டி அகற்றியும் வருகின்றனர்.

படையினரின் இந்த நடவடிக்கை காரணமாக இந்தப் பகுதிகளின் பிரதான வீதியோரங்களில் உள்ள வேம்பு, ஆல், விளாத்தி போன்ற மரக்கிளைகள் குவியலாகக் கிடக்கின்றன.

குடியிருப்பற்ற வீட்டு வளவுகளிலும் வீதிகளிலும் உள்ள மரங்களைத் தாங்களாகவே தறிக்கும் படையினர் குடியிருப்பாளர்களிடம் அந்தந்த வளவுகளில் உள்ள மரக்கிளைகளை அடி யோடுவெட்டி விடுமாறும் பணித்துள்ளனர் என்று கூறப்பட்டது. (த-111)

## யாழ்.கூ.சங்கத்திற்கு புதிய முகாமையாளர்

குருநகர்,ஜன.7

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளராக, அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பொது முகாமையாளராக சேவைபுரியும் கவிதரன் எதிர்வரும் 13ஆம் திகதி தொடக்கம் கடமையைப் பொறுப்பேற்கவுள்ளார்.

இதேவேளை, தற்போது யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொதுமுகாமையாளராகச் சேவைபுரியும் எம்.தெய்வேந்திரன் எதிர்வரும் 12ஆம் திகதியுடன் தமது சேவையில் இருந்து ஓய்வுபெற உள்ளார்.

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் தலைமையுரை நிகழ்த்திய சங்கத்தின் உபதலைவர் எஸ்.கணநாதன் இத்தகவலைத் தெரிவித்தார். (ஒ-51)



வல்வை ஆலடி மாவீரர் பூங்காவில் தமிழக முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரனின் உருவச்சிலை வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி மக்களால் அமைக்கப்பட்டுள்ளது. அண்மையில் இடம்பெற்ற சிலைத் திறப்பு விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் சிலையைத் திரைநீக்கம் செய்து வைப்பதைப் படத்தில் காணலாம். (படம்: சுந்தரலிங்கம்)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## நாயுடன் மோ.சைக்கிள் மோதியதால் விபத்து; இருவர் காயம்

தென்மராட்சி,ஜன.7

வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் அதில் பயணஞ் செய்த இருவர் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தனர்.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை கொடிகாமம் - கச்சாய் வீதியில் இடம்பெற்றது.

கச்சாய் வடக்கைச் சேர்ந்த பொன்னுத்துரை மனோகரன் (வயது 45), கந்தையா மகேந்திரராசா (வயது 50) ஆகியோரே இந்த விபத்தில் காயமடைந்தவர்களாவர்.

இவர்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (ஒ-117)

# பலாலி வீதியை அகலமாக்கும் திட்டம்: சிறாம்பியடி மக்களின் நிலைப்பாடு முன்வைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.7

பலாலி வீதியை, யாழ்.நகரில் அதன் ஆரம்ப இடத்தில் இருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தூரத்துக்கு அகலமாக்குவது தொடர்பாக அந்த வீதிப்பகுதியின் இருமருங்கிலும் காணிகளைக் கொண்டுள்ள குடியிருப்பாளர்கள் தமது நிலைப்பாடுகளை வெளியிட்டிருக்கின்றனர்.

சிறாம்பியடி (ஜே-79) கிராம அலுவலர் பிரிவுக்குள் அடங்கும் இந்த ஒரு கிலோ மீற்றர் தூர வீதிப் பிரதேசத்தில் வசிக்கும் குடியிருப்பாளர்கள் சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்க சனசமூக நிலையத்தில் அண்மையில் நடத்தப்பட்ட கலந்துரையாடலில் கலந்து கொண்டு தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கின்றனர்.

வீதியை அகலமாக்கும் இந்தத் திட்டத்தைப் பொதுநன்மை கருதி ஏற்றுக்கொள்வதே நல்லது என்ற பொதுவான அபிப்பிராயத்தைக் குடியிருப்பாளர்கள் ஆதரித்த போதிலும் இந்தத் திட்டத்தில் தமக்குப் பாதிப்பான பல விடயங்கள் காணப்படுவதால் அவற்றை அப்படியே ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர்கள் தெரிவித்தனர்.

தங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் எனக் கருதும் விடயங்களைச் சுட்டிக் காட்டி இப்பகுதி குடியிருப்பாளர்கள் சார்பில் சிறாம்பியடி (ஜே-79) கிராம அலுவலருக்கு சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கம் - சனசமூக நிலையம் கடித ஒன்றை அனுப்பியிருக்கின்றது.

அதில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கும் விடயங்கள் வருமாறு:-

- வீதியை அகலமாக்குவதற்காக விட்டுக் கொடுக்கும் காணிக்கு நஷ்டஈடு தரப்படவேண்டும்.
- முதலில் குடிசன அடர்த்தி குறைந்த பகுதிகளைத் தெரிவுசெய்து வீதியை அகலமாக்கலாம்.
- வீதியை அகலமாக்குவதற்காக வேலிகள், மதில்களை குடியிருப்பாளர்களே உடைத்து அகற்றவேண்டும் என்பதையும் அதற்கான செலவையும் அவர்களே ஏற்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால், தற்போதைய சூழ்நிலையில் மதில்கள், வேலிகளை அகற்றுவது என்பது பாதுகாப்புப் பிரச்சினைகளை ஏற்படுத்தும் -
- இத்திட்டத்தின் கீழ் விஸ்தரிக்கப்படவுள்ள வீதியின் விஸ்தரிப்பு அளவு எழுத்து மூலம் உறுதிப்படுத்தப்படவில்லை -
- இது தொடர்பாக அரச அதிபரின் எழுத்து மூலமான உத்தரவாதம் தரப்படவேண்டும் -

இந்த விடயங்கள் உட்பட பல கருத்துக்களைக் குடியிருப்பாளர்கள் வெளியிட்டிருக்கின்றனர் என்று சனசமூக நிலைய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

வீதியை அகலமாக்கும் திட்டத்தை ஏற்றுக்கொண்ட ஒரு சில குடியிருப்பாளர்கள் அதற்கு ஒப்புதலை அளிக்க முன்வந்த போதிலும் அனைவரும் பொது நன்மை கருதி இந்த அபிப்பிராயங்களை அவர்களும் பின்னர் ஏற்றுக்கொண்டனர் என்றும் சனசமூக நிலையம் தெரிவித்துள்ளது.

குறிப்பு:

'பலாலி வீதியை அகலமாக்க சிறாம்பியடி மக்கள் ஒத்துழைப்பு' என்ற தலைப்பில் கடந்தமாதம் 24 ஆம் திகதி உதயனில் செய்தி ஒன்று வெளியாகி இருந்தது.

அந்தச் செய்தி தொடர்பாக மேற்படி சனசமூக நிலையத்தினர் குடியிருப்பாளர்களின் அபிப்பிராயங்களை உதயனுக்கும் அனுப்பி வைத்திருக்கின்றனர். (ஐ)

# 1 ஆம், 6ஆம் வகுப்பு மாணவர்களின் கல்வித் தரம் மேம்படத் திட்டம்

## தென்மராட்சி வலயத்தில் நடவடிக்கை

தென்மராட்சி,ஜன.7

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம்1, தரம் 6 ஆகிய வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களின் கல்வித் தரத்தினை மேம்படுத்த வலயக் கல்வி அலுவலகத்தினால்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி, இந்த வகுப்புகளில் கற்கும் மாணவர்களிடம் கூடிய கவனம் செலுத்தப்படும். பயிற்சி பெற் பொருத்தமான ஆசிரியர்கள் மூலம் கற்பித்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் இந்தக் கற்பித்தல் நடவடிக்கைகளை உள்ளக மேற்பார்வை செய்து மாதாந்தம் அறிக்கை சமர்ப்பிக்குமாறு அதிபர்களையும் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார்.

மாதாந்தம் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையின் பிரகாரம் வலயக் கல்வி அலுவலகத்திலிருந்து விசேட குழுவினர் இவ் வகுப்புகளின் செயற்பாடுகளை அவதானிப்பதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (ஒ-117)




வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் பிரசாரப் பணிகளுக்காக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி மூலம் கொள்வனவு செய்யப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டியை வலி.மேற்குப் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் சம்மேளனத்தின் தலைவர் சி.இராசலிங்கம், செயலாளர் சி.குமாரசிங்கம் ஆகியோரிடம் கையளித்த போது எடுக்கப்பட்ட படம். வலி.மேற்கு உதவி பிரதேச செயலர் திருமதி எஸ்.பானு உட்படப் பிரமுகர் பலரும் அதில் காணப்படுகின்றனர். (படம்: வலி.மேற்குச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






ஒட்டுசுட்டான் மத்திய மருந்தகத்தின் திறப்புவிழா சமீபத்தில் நடைபெற்றது. அதன் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

பிரதேச செயலர் செல்வி சுபாஜினி கந்தையா மருந்தக பெயர்ப்பலகையைத் திறந்துவைப்பதை முதலாவது படத்திலும் திறப்புவிழா நிகழ்வில் கலந்துகொண்ட பொதுமக்களில் ஒருபகுதியினரை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள்: இ.தனபாலசிங்கம், ஒட்டுசுட்டான் செய்தியாளர்)

## கவனிப்பார் இன்றி கறுக்காய் தீவு ம.வி.

பூநகரி,ஜன.7

கிளிநொச்சி கறுக்காய் தீவு மகாவித்தியாலயத்தின் தற்காலிக கொட்டகைகள் இடிந்த நிலையிலும் கூரைகள் பிடுங்கப்பட்ட நிலையிலும் கவனிப்பார் அற்றுக் காணப்படுகின்றது.

பூநகரி கோட்டப் பாடசாலைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுகின்ற இப்பாடசாலை கொட்டகைகள் இடிந்த நிலையில் காணப்படுவதையிட்டு இக்கிராம மக்கள் கவலையடைந்துள்ளனர்.

இதனால் மாணவர்களும் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். எனவே, உரிய தரப்பினர் இதில் அக்கறைகொண்டு செயற்படுமாறு பெற்றோர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (த-403)

கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்

# தமிழர் அனைவரும் வயது வேறுபாடின்றி ஆயுதம் ஏந்தும் நிலை விரைவில் ஏற்படும்

### பரந்தன் மகளிர் அமைப்புகள் படையினருக்கு எச்சரிக்கை

பரந்தன்,ஜன.7

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஸ்ரீலங்காப் படையினர் தமிழ்மக்கள் மீது மேற்கொண்டுவரும் பயங்கரவாதச் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்தாவிட்டால் தமிழ் மக்கள் அனைவரும் வயது வேறுபாடின்றி ஆயுதம் ஏந்திப் போராடும் நிலை விரைவில் ஏற்படும்.

- இவ்வாறு எச்சரிக்கை விடுத்திருக்கின்றது பரந்தன் பிரதேச மகளிர் ஒன்றியம். ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் கெடுபிடிகள், வன்முறைகளைக் கண்டித்து கடந்த 3ஆம் திகதி பரந்தன் பிரதேசத்தில் நடைபெற்ற கண்டனப் பேரணியின் முடிவில் வெளியிடப்பட்ட கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது :-

யாழ். மண்ணிலும் தமிழீழத்தின் ஏனைய பகுதிகளிலும் சிங்கள இனவெறிப் படையினராலும் அதன் ஒட்டுக் குழுக்களாலும் இராணுவப் புலனாய்வுத்துறையினராலும் மிகவும் திட்டமிட்ட நிலையில் எமது மக்கள் , பல்கலைக்கழக மாணவர்கள், பேராசிரியர், துணைவேந்தர், இளம்பெண்கள், இளைஞர்கள் மீதான கொலைவெறியாட்டத்தை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

குறிப்பாக யாழ். குடாநாட்டில் கிருஷாந்தியில் ஆரம்பமாகி இன்று தர்சினிவரை தொடரும் பெண்கள் மீதான படுகொலைகளையும், அண்மையில் படுகொலை செய்யப்பட்ட 16 வயது மாணவனின் படுகொலையையும் மற்றும் மாமனிதரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான திரு.ஜோசப் பரராஜசிங்கம், இவருக்கு முன்னர் படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர்கள், நாட்டுப்பற்றாளர்கள், புத்திஜீவிகள், அனைவரதும் படுகொலைச் சம்பவங்கள் அனைத்திற்கும் சர்வதேச சமூகம் தமது பகிரங்கமான கண்டனத்தைத் தெரிவிப்பதுடன் இந்த அரச பயங்கரவாதத்திற்குச் சர்வதேச தடையைக் கொண்டுவரவேண்டும்.

இனிமேலும் சிங்களப் பேரினவாதம் எமது மக்கள், மாணவர்கள் மீதான கொலைவெறித் தாக்குதலை நிறுத்தாவிடின் நாம் வயது வேறுபாடின்றி அனைவரும் ஒன்றுதிரண்டு ஆயும் ஏந்திப் போராடி, சிங்களப் படைகளையும் அதன் ஒட்டுக்குழுக்களையும் அழித்தொழிப்போம் என இந்த அறிக்கை மூலம் எச்சரிக்கின்றோம்.

அத்தோடு இராணுவமும் ஒட்டுக்குழுக்களும் எம் எச்சரிக்கையை ஏற்று ஒதுங்காவிட்டால் தமிழீழத்தில் இருக்கும் இராணுவத்தையும் ஒட்டுக்குழுக்களையும் பெட்டியில் ஊருக்கு அனுப்பிவைப்போம் என உறுதியாகவும் இறுதியாகவும் கூறி வைக்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.(த-405)

## மக்கள் வங்கியின் முல்லைத்தீவுக் கிளை விரைவில் கணனி மயம்

புதுக்குடியிருப்பு,ஜன.7

மக்கள் வங்கியின் முல்லைத்தீவுக் கிளையைக் கணனி மயப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தத் தகவலை மக்கள் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் ஆனந்தராசா தெரிவித்தார்.

கடந்த 30ஆம் திகதி முல்லைத்தீவுக் கிளைக்கு வருகைதந்திருந்தபோதே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அப்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:-

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான கடன் திட்டங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரச ஊழியர் கடனைப் பெற்றுக்கொள்வதற்குத் தமது ஆவணங்களை முழுமையாகச் சமர்ப்பிக்கவேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கும்போது கடனை இலகுவாகப் பெற்றுக்கொள்ளமுடியும் - என்றார்.

(த-353-202)

## ஒட்டுசுட்டான் மருந்தகத்தில் சிரமதானம்

ஒட்டுசுட்டான்,ஜன.7

ஒட்டுசுட்டான் பிரதேச மக்கள் ஒன்றிணைந்து ஒட்டுசுட்டான் மத்திய மருந்தகத்தில் சிரமதானம் மேற்கொண்டுள்ளனர்.

கடந்தகால இராணுவ நடவடிக்கையால் சேதமடைந்திருந்த மேற்படி மருந்தகம் அண்மையிலேயே புனரமைக்கப்பட்டு செயற்பட ஆரம்பித்தது. அதன் வளாகத்தில் புல், பூண்டுகள், பற்றைகள் மண்டிப்போயிருந்ததை அவதானித்த பிரதேச மக்கள் ஒட்டுசுட்டான் பிரதேச செயலரின் ஆதரவுடனும் கிராம சேவகரின் வழிநடத்தலுடனும் கடந்த 31 ஆம் திகதி சிரமதானத்தை மேற்கொண்டுள்ளனர். (த-341-202)

# உடனடிப் பயன்பாட்டிற்குரிய திட்டங்களுக்கு முன்னுரிமை

### வழங்கவேண்டும் என்கிறார் கரிகாலன்

பரந்தன்,ஜன.7

மக்கள் உடனடியாகப் பயன்பெறக் கூடியதும் சமூக, பொருளாதாரத்தை உயர்வடையச் செய்யகூடியதுமான திட்டங்களே முன்னெடுக்கப்படவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன்.

புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் பணிமனைக் கேட்போர் கூடத்தில் 2006ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் பொருளாதார அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் அன்பழகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கருத்துத் தெரிவித்தபோதே சி.கரிகாலன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் மத்தியில் சரியான முறையில் வேலைத்திட்டங்களை முன்வைத்து அதற்கான நிதிகளைச் சரியான முறையில் பயன்படுத்தி குறிப்பிட்ட காலத்தில் வேலைகளைச் செய்துமுடிக்கவேண்டும்.

இதில் மக்களுக்குப் பயன்தரக் கூடிய திட்டங்களை உடனடியாகச் செய்யவேண்டும்.

அத்துடன், புதிய திட்டங்களை இனங்கண்டு நடைமுறைப்படுத்தி பொருளாதாரத்தை உயர்வடையச் செய்வதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் - என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட கமநல விவசாய நீரியல் திணைக்கள உத்தியோகத்தர்கள், பனை, தென்னை வள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

(த-352-203)

# ஜெயந்திநகர் வீதி சேதம்

பரந்தன், ஜன.7

கிளிநொச்சி, சேவியர்கடைச் சந்தியில் இருந்து ஜெயந்திநகர் நோக்கிச் செல்லும் வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் உள்ளளமையால் இவ்வீதியால் பயணம் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இவ்வீதி பாரிய குண்டும் குழியுமாக காணபபடுகின்றது. இதனால் இரவு வேளைகளில் வாகனங்களில் பயணிப்போரும் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இவ்வீதியில் சிறிதளவு தூரம் சிலமாதங்களுக்கு முன்னர் புனரமைப்புச் செய்யப்பட்டது. மிகுதி இதுவரை புனரமைப்புச் செய்யப்படவில்லை.

எனவே, உரியவர்கள் இவ்விடயத்தில் கவனமெடுத்து இவ்வீதியை முழுமையாகப் புனரமைப்புச் செய்துதரவேண்டும் என்று இவ்வீதியால் பயணிப்போர் கோரியுள்ளனர்.

(த-352-203)

## 'நெஸ்லே' நிறுவன உதவியுடன் முல்லைத்தீவில் முன்பள்ளி

புதுக்குடியிருப்பு,ஜன.7

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவுப் பிரதேசத்தில் நெஸ்லே நிறுவனம் முன்பள்ளிஒன்றை அமைத்துக் கொடுக்கவுள்ளது.

இந்த முன்பள்ளிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த 24ஆம் திகதி நடைபெற்றது.

கரைதுறைப்பற்று விசேட ஆணையாளர் இ.கிருஷ்ணபிள்ளை வைபவ ரீதியாக முன்பள்ளிக்கான அடிக்கல்லை நட்டுவைத்தார்.

சகல வசதிகளுடன் கூடிய மாதிரி முன்பள்ளியாக இம்முன்பள்ளி அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(த-353-202)

# மல்லாவி நீர்த்தாங்கியின் திருத்தப் பணிகள் தாமதம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி பிரதேசத்தில் 'நியாப்' திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட நீர்த்தாங்கியின் திருத்த வேலைகள் நிறைவுபெறாததால் அங்கு நீர் வழங்கும் செயற்பாடு நடைபெறவில்லை.

இந்த நீர்த்தாங்கி 2005ஆம் ஆண்டு 'நியாப்' திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்டது. இது தற்போது இயங்காததால் கோடை காலத்தில் மக்கள் குடிதண்ணீர் வசதியின்றி அவுதியுறும் நிலை ஏற்படும் என்று கூறப்படுகிறது. இதுதொடர்பாக உயர் அதிகாரிகளுக்குப் பலமுறை தெரியப்படுத்தியும் எதுவித முயற்சிகளும் ஆரம்பிக்கப்படவில்லை என்றும் -

எனவே, உரியவர்கள் இவவிடயத்தில் அக்கறைகொண்டு செயற்படவேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(த-403)

# சொலிடர் நிறுவனம் நடத்தும் கண்காட்சி

ஆழிப்பேரலை அனர்த்தங்களையடுத்து நடைபெற்றுவரும் மீள்கட்டுமானப் பணிகள் தொடர்பான கண்காட்சி ஒன்றை சொலிடர் நிறுவனம் கிளிநொச்சியில் நடத்தவிருக்கின்றது.

கிளிநொச்சி திட்டமிடல் மற்றும் மேம்பாட்டு செயலகத்தில் இம்மாதம் 16ஆம் திகதி மாலை 6 மணிக்கு இக்கண்காட்சி நடைபெறும். பின்னர் சொலிடர் அபிவிருத்திப் பணிகள் நடைபெறும் வட மராட்சி பகுதியிலும் நடத்தப்படும்.

சொலிடர் மீள்கட்டுமானப் பணிகள் நடைபெறும் செம்பியன்பற்று, வத்திராயன் மற்றும் உடுத்துறைப் பகுதிகளில் முறையே 17, 19, 20ஆம் திகதிகளில் இக்கண்காட்சி நடத்தப்படும். ஆழிப்பேரலை அனர்த்த விளைவுகள் தொடர்பான சிறுவர்களின் கைவண்ணங்கள் உட்பட 200 புகைப்படங்கள் இக்கண்காட்சியில் இடம்பெறவிருக்கின்றன.

ஏற்கனவே கடந்த டிசெம்பரில் இந்தக் கண்காட்சி கொழும்பில் நடத்தப்பட்டுள்ளது. ஐரோப்பாவில் நோர்வே, பிரஸல்ஸ் மற்றும் இத்தாலி முதலிய இடங்களிலும் இக் காண்காட்சி இடம்பெற்றுள்ளது.

மனிதநேய முகவர் அமைப்புகளால் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்படும் மீள் கட்டுமானப் பணிகளையும் இக்கண்காட்சி எடுத்துக்காட்டுவதாய் இருக்கும். (ப)

# பனை மத்திய கல்லூரியில் ஆசிரியர் விடுதி அமையும்

பளைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான விடுதி பளை மத்திய கல்லூரி வளவில் அமைக்கப்படவுள்ளன.

இந்த விடுதிகளுக்கான அடிக்கல்லை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா நட்டுவைத்தார்.

பளை மத்திய கல்லூரி அதிபர் க.குணபாலசிங்கம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

தலா எட்டு அறைகளைக் கொண்ட இரு விடுதிகள் அமையவுள்ளன.

தூர இடங்களிலிருந்து வரும் பளைக் கல்விக் கோட்டப் பாடசாலை ஆசிரியர்களின் நன்மைகருதி விடுதிகள் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-6-117)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# INVITATION TO BID

School Buildings and Infrastructure Reconstruction Programme Funded by UNICEF For the Ministry of Education of the Democratic Socialist Republic of Sri Lanka.

**CONSTRUCTION OF TWO SCHOOLS;**
**LOT 1: VALVAI RCTMS SCHOOL IN JAFFNA DISTRICT**
**(PROJECT No. SL 01C1-0101/CONTRACT No.SL 01P1-0101) AND**
**LOT 2: VALVAI SIVAGURU VIDYALAYAM IN JAFFNA DISTRICT**
**(PROJECT No. SL01C1-0102/CONTRACT No. SL01P1-0102)**

1. A memorandum of Understanding between the Government of Sri Lanka and UNICEF has been signed to rehabilitate the school Infrastructure in the areas affected by the Tsunami on 26th December 2004. UNICEF has consented to provide assistance to the Ministry of Education of the Democratic Socialist Republic of Sri Lanka for the reconstruction of school damaged by the Tsunami. The implementation power of UNICEF is the United Nations Office for Project services (UNOPS) Srilanka Project implementationFacility (SLPIF)

2. United Nations Office for Project Services – Sri Lanka Project implementation Facility, here in after referred as "UNOPS – SLPIF", invites sealed bids from the eligible bidders for the Construction of two schools in jaffna District given below:

| | Location | Bid Bond | ICTAD Grading |
|---|---|---|---|
| Lot 1 | Valvai RCTMS School,Jaffna | Rs 200,000 | >M4 |
| Lot 2 | Valvai Sivaguru Vdyalayam Jaffna | Rs. 500,000 | >M3 |

3. Interested bidders may submit a written application and purchase a complete set of bidding documents upon the payment of a non refundable fee of Rs, 3,000,00 for each lot. Bidding documents will be issued to eligible bidders 9.30 am to 5.00 pm. On working days from 9th Jan 2006 to 25th Jan 2006 at UNOPS – SLPIF in Colombo at 17 Park Avenue, Colombo 05 . Contractors with ICTAD Gradihg mentioned above may subhmit the counplar bids (Lots 1&2) or Partial bids Lot 1 or Lot 2, Provtned full Boo ure Submitted in a lot for each location.
4. Additional information regarding the Bidding Documents will be available at the office of the Chief Technical Advisor of UNOPS-SLPIF at No 17, Park Avenue, Colombo 5
5. This Invitation to Bid Shall cose at 2pm on 27th Jan 2006 at UNOPS office, 17 Park Avenue, Colombo -5 All bids must be addressed to The Country Coordinator of UNOPS SriLanka Project Implementation Facility (UNOPS-SLPIF) and accompanied by a Bid Security in the prescribed format.
6. UNOPS –SLPIF will not be responsible for any costs or expenses incurred by bidders in connection with the preparation or delivery of bids.

Country Coordinator,
UNOPS- SLPIF

(c/47231)

# யாழ். தாக்குதல்களுக்கு புலிகள் காரணமெனில் தகுந்த ஆதாரங்களை எமக்கு கையளியுங்கள்

## படைத்தரப்புக்கு கண்காணிப்புக்குழு வலியுறுத்து

• யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்ற தாக்குதல்களுக்கு விடுதலைப் புலிகள் காரணம் எனக் கூறினால் அதற்கான தகுந்த ஆதாரங்களை இராணுவம் எம்மிடம் கையளிக்கவேண்டும்.

- இவ்வாறு இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது என இணையத்தளச் செய்தியொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ஹெலன் ஓலப்ஸ் டொட்டிர் கருத்துக் கூறியதாவது:-

யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெறும் சம்பவங்களுக்கெல்லாம் புலிகளே காரணம் என இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க கூறிவருகிறார். ஒவ்வொரு தாக்குதல் சம்பவங்களின் போதும் புலிகள் மீது குற்றம்சாட்டி இராணுவம் அறிக்கைவிட்டு வருகிறது. அச்சம்பவங்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பிருப்பதற்கான ஆதாரங்கள் தம்மிடம் இருக்கிறது எனக் கூறும் இராணுவம், அவற்றை எம்மிடம் கையளிக்கவேண்டும்.

இவற்றை நாங்கள் கேட்டுத்தான் அவர்கள் தரவேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்துவிடாது அவர்கள் அவற்றை எம்மிடம் கையளிக்கலாம். எனவே, இராணுவத்தின் இந்த கருத்துநிலைகுறித்து நாம் அவர்களிடம் அவ்வாறான ஆவணங்கள் இருந்தால் எமக்கு தருமாறு கோரவுள்ளோம் - எனத் தெரிவித்தார். (க)

# ஒற்றையாட்சி சிந்தனையைக் கைவிட்டு போர்ச்சூழலை நீக்க நடவடிக்கை எடுங்கள்

## ஜனாதிபதிக்கு இ.தே.தோ.தோ. செயலர் கடிதம்

கொழும்பு,ஜன.7

"நாட்டில் இன ஐக்கியம், சமாதா னம், பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டுமானால் தங்களின் ஒற்றையாட்சி சிந்தனையில் மாற்றம் ஏற்பட வேண்டும் இதுவே, இன்றைய போர்ச் சூழலை நீக்கி மக்கள் அச்சமின்றி வாழ வழிவகுக்கும்.

-இவ்வாறு இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க பொதுச் செயலாளரும், ஊவா மாகாணசபை உறுப்பினருமான கே.வேலாயுதம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இக்கடிதத்தில் அவர் மேலும் தெரி வித்திருப்பதாவது:-

"கடந்த மூன்று வருடங்களாக நிலவிய யுத்தநிறுத்தம் முறிவடைந்து மீண்டும் யுத்தம் வந்துவிடுமோ" என்ற அச்சம் சகல இன மக்களிடையேயும் தற்போது நிலவுகின்றது. ஐரோப்பாவிலா அல்லது ஆசியாவிலா பேச்சுகளை நடத்துவது என்பது முக்கியமல்ல; பேச்சுகள் உடன் நடத்தப்பட வேண்டும்; புரையோடிப் போயுள்ள இனப் பிரச்சினைக்கு உடன் தீர்வு காணப்பட வேண்டும். இதுவே மிக முக்கியமானது, அவசியமானது. இதுவே நாட்டை பேரழிவிலிருந்து காப்பாற்றும்.

பல இனங்கள் வாழும் உலக நாடுகளில் சமஷ்டியே சிறந்த ஆட்சிமுறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அமுலில் உள்ளதை நாம் காண்கின்றோம். இந்த முறைமூலம் இன ஐக்கியம், பொருளாதார அபிவிருத்தி என்பன வேகமாக முன்னேற்றம் கண்டுள்ளன.

எனவே, மனித நேயத்தோடு அனைத்து சகல இன மக்களையும் மதிக்கின்ற நல்ல பண்புள்ள நாடாக எமது நாடு திகழவும் - மதிக்கப்படவும் வேண்டும் என்றால், இன ஒடுக்கல் கொள்கைக்கு அப்பால் அனைத்து மக்களும் சமத்துவமாக தங்களின் சமூக தனித்துவ உரிமைகளையும், கலாசாரப் பண்பாடுகளையும், விழுமியங்களையும் பேணிப்பாதுகாத்துக் கொள்ளக்கூடியதாக சமஷ்டி ஆட்சி அமைய உறுதியாக செயல்படுவதன் மூலமே இன ஐக்கியத்தை ஏற்படுத்தமுடியும் - என்றுள்ளது.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடந்த 2005 இல் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் மல்லாகம் விசாலாட்சி வித்தியாலய மாணவி செல்வி ம. இந்துஜா 127 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டு அவரை ஊக்குவித்த அதிபர், ஆசிரியர்களுக்கு நன்றிகளை தெரிவிப்பதுடன் இந்துஜா அவர்கள் மேலும் பல சாதனைகள் புரிய வாழ்த்துகின்றோம்.

நடராஜா [அப்பப்பா -சுவிஸ்].

செல்வி
ம.இந்துஜா



## பதினொராவது ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில் 1928 . 06 . 05



விண்ணுலகில் 1995 . 01 . 09

பலாலி தெற்கு -வயாவிளான்

செல்லத்துரை உலகநாதன் ஜே.பி
[ஓய்வுபெற்ற கிராம சேவையாளர்]

உதவும் கரங்கள் ஓய்ந்து மறைந்து
பதினொராண்டுகள் பறந்தனவே இன்று
எதிலும் முதல்வனாய் எல்லோரும் உவக்கின்ற
அதி உத்தமர் உங்கள் அன்புமொழி வடிவில்
எங்களின் உள்ளத்தில் என்றுமே வாழ்வீர்கள்.

பலாலி தெற்கு,
வயாவிளான்.
(44893)

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநேர

# Computer Hardware Engineering Course

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப்பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதளைப் பெற

உங்கள் கணனிகளை நீங்களே அமைத்துக்கொள்வதற்கான 100% பயிற்சி நெறி

◊Assembling ◊Upgrading ◊Troubleshooting ◊Fault Finding ◊Repairing ◊Servicing ◊Software Installation ◊Configuring ◊Introduction to Networking

*Course Contents*
- கணனி தொடர்பான அறிமுகம்
- Operating System - Windows XP & DOS
- Internet & e-mail
- கம்யூட்டரின் பாகங்களும் அவற்றின் விளக்கங்களும்
- Mother Board, Processor, Ram தொடர்பான விரிவான விளக்கம்
- கம்யூட்டரை அசெம்பிள் செய்தல்
- அசெம்பிளிங் முடிந்தவுடன் என்ன செய்வது என்பது தொடர்பான விளக்கம் (BIOS Setup)
- Hard Disk ஐ முறைப்படுத்தல்
- Software, Operating System இன்ஸ்ரோல் செய்தல்
- கம்யூட்டரில் ஏற்படும் பழுதுகளை சூரிபார்த்தல்.

Course Fee :- 2000/=
Free Study Pack & Drivers CD
வகுப்புக்கள் ஆரம்பம்:-
09/01/2006 :- 08.30-4.00

*Hard ware பயிற்சி*
- ❖கணனிப் பாகங்களை இனம்காணும் முறை
- ❖Assembling
- ❖BIOS Configurations (முறைப்படுத்தல்)
- ❖Hard Disk முறைப்படுத்தல் (Partition & Formatting)
- ❖Network தொடர்பான அறிமுகம்
- ❖Troubule Shooting / Maintenance.

*Software பயிற்சி*
- ❖Operating System நிறுவும் முறை (Windows 98 / Windows XP)
- ❖Software Install செய்யும் முறை
- ❖Driver Installation செய்யும் முறை (Sound Card,Modam,VGA,TV Card,Printer)
- ❖Troubule Shooting (File updating, Copying)

நன்மைகள்
- ❖ பாடநெறியின் இறுதியில் கம்யூட்டர் காட்வெயார் சம்பந்தமான பூரண அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்.
- ❖ PI முதல் P4 வரையிலான கம்யூட்டர்களில் பூரண செய்முறைப் பயிற்சி.
- ❖ எமது ஆய்வுகூடத்தில் கம்யூட்டரின் உட்தொழினுட்பம் பற்றி பூரண அறிமுகம் செய்வதால் கம்யூட்டர் பற்றிய முன்னறிவு அவசியமில்லை.

COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 15, Sirampiyadi lane , Jaffna.
Telephone :- 021 2228230 , 0777 222422

கொழும்பிலிருந்து வருகைதரும் விரிவுரையாளரால் வகுப்புக்கள் நடாத்தப்படும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்த செயற்பாட்டுக் குழு

கொழும்பு,ஜன.7

வடக்கு - கிழக்கு உட்பட நாட்டில் இடம் பெறும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள செயற்பாட்டுக் குழு ஒன்றை மனித உரிமைகள் ஆணைக்குழு நியமித்துள்ளது.

ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசரும் அரசியல் யாப்புச் சபையின் முன்னாள் உறுப்பினருமான ரி.சுந்தரலிங்கம் இக்குழுவின் விசேட ஆய்வறிக்கையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இக்குழுவில் ஏனைய உறுப்பினர்களாக இலங்கை நிர்வாக சேவையில் இருந்து ஓய்வுபெற்ற எம்.சீ.எம்.இக்பால், கடமையின் போது காணாமற்போன படையினரின் உறவினர்களின் சங்கத் தலைவியான திருமதி விசாகா தர்மதாஸ ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் செயற்பாட்டுக் குழு தொடர்பாக ஆணைக்குழுவின் தவிசாளர் கலாநிதி ராதிகா குமாரசாமி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அண்மைக் காலங்களில் ஆயுத முரண்பாடுகளோடு தொடர்பான வன்முறைகள் அதிகரித்து வருகின்ற நிலையில் அவற்றின் நிகழ்வுகளின் பொழுது நியாயமற்ற வகையிலான கொலைகள், சுற்றி வளைத்து தேடுதல்கள், ஆள்கள் கைதுசெய்யப்படுதல், அவர்கள் தடுத்து வைக்கப்படுதல் போன்ற மனித உரிமை மீறல்களோடு தொடர்பான சம்பவங்கள் பரவலாக நாடு பூராகவும் குறிப்பாக வடக்கு - கிழக்கிலும் நடப்பதாக குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையலுவலகத்திலும் பிராந்திய நிலையங்களிலும் தற்பொழுது பணிபுரிபவர்களைக் கொண்டு அவ்வகையான சந்தர்ப்பங்களில் ஏற்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விடயங்களை செயல்வலுவுள்ள வகையில் கண்காணித்து விசாரணைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க செய்விப்பது கடினமாக உள்ளமையால் அக்குறையை தீர்க்க வேறு பொறுப்புகளுடன் பின்வரும் பொறுப்புக்களையும் ஏற்று செயற்பட விசேட ஆய்வறிக்கையாளர் ஒருவரையும் (**Special Rapporteur**) அவரின் தலைமையின் கீழ் செயற்பட குழு ஒன்றையும் நியமிப்பது அவசியமாகியுள்ளது.

அவையாவன:

* போர்நிறுத்த உடன்படிக்கை மீறப்பட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டப்படும் பொழுதிலும் அவசரகால அதிகாரங்களைப் பயன்படுத்தும் தறுவாய்களிலும் சாதாரண குடிமக்களின் மனித உரிமைகளைப் பாதுகாக்க எடுக்கப்பட வேண்டிய ஒழுங்கு விதிமுறைகள் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு ஆலோசனை வழங்குதல்.
* தங்களது கடமைகளைப் புரியும் பொழுது மனித உரிமைகள் தொடர்பான பிரமாணங்களைப் பொலீஸாரும் பாதுகாப்புப் படையினரும் பேணுவதைக் கண்காணிக்க அவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி தகவல்களைத் திரட்டுதல்.
* தேவையேற்படும் பொழுதில் விசாரணைகளை நடத்தி ஆணைக் குழுவுக்கு அறிக்கை சமர்ப்பித்தல்.
* போர்நிறுத்த உடன்படிக்கை மீறப்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டப்படும் பொழுதிலும் அவசரகால அதிகாரங்களைப் பயன்படுத்தும் தறுவாய்களிலும் ஏற்படுகின்ற நிகழ்வுகளினை தொகுத்து மனித உரிமைகளின் நிலை பற்றி இருவாரங்களுக்கு ஒரு முறை அறிக்கை சமர்ப்பித்தல்.

குறித்த விசேட ஆய்வறிக்கையாளர் அவர்களுக்கும் செயற்பாட்டுக் குழுவினருக்கும் பொலீஸாரும் பாதுகாப்புப் படையினரும் தங்களுடைய ஒத்துழைப்பை வழங்குவார்கள் என மனித உரிமைகள் ஆணைக் குழு எதிர்பார்க்கின்றது.

குறித்த விசேட ஆய்வறிக்கையாளரைப் பின்வரும் விலாசத்தில் பொதுமக்கள் தொடர்பு கொள்ளலாம் - என்றுள்ளது.

(3)

## நெடுந்தீவில் கூரைத் தகடு விநியோகம்

நெடுந்தீவு,ஜன.7

நெடுந்தீவுப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த வறுமைக் கோட்டின் கீழ் உள்ள 150 குடும்பங்களுக்கு 'வேல்ட் விசன்' நிறுவனம் கூரைத் தகடுகளை வழங்கியுள்ளது.

இந்த நிறுவனம், நெடுந்தீவில் நிரந்தரமாக வசிக்கும் குடும்பங்களுக்கு நுளம்பு வலைகளையும் இலவசமாக வழங்கியிருந்தது. (எ-111)

## நெடுந்தீவு-மத்தியில் முன்பள்ளிக் கட்டடம்

நெடுந்தீவு,ஜன.7

நெடுந்தீவு மத்தியில் முன்பள்ளிக்கான புதிய கட்டடம் ஒன்றை நெடுந்தீவுப் பிரதேச சபை நிர்மாணித்து வருகின்றது. இந்தக் கட்டடத்திற்கென 2004 - 2005 ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத் திட்டத்தின் கீழ் ஒன்றரை லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. (எ-111)

# தமிழ் மாணவர் மீதான தொடர் தாக்குதல்கள் தமிழீழ சுதந்திரப் போருக்கு வழிவகுத்துவிடும்

### எச்சரிக்கிறது வடமராட்சி தமிழ் மாணவர் ஒன்றியம்

கரவெட்டி,ஜன.7

தமிழ் மாணவர்கள் மீது தொடர்ச்சியாக நடத்தப்படும் தாக்குதல்கள் தமிழீழ சுதந்திரப் போருக்கு வழிவகுத்துவிடும்.

இவ்வாறு தெரிவித்துள்ளது வடமராட்சி தமிழ் மாணவர் ஒன்றியம்.

திருமலையில் ஐந்து தமிழ் மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து மேற்படி ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை வருமாறு:-

கடந்த திங்கட்கிழமை 02.01.2006 தமிழர் தாயகத்தின் தலைநகரான திருகோணமலையில் எமது மாணவ சகோதரர்கள் ஸ்ரீலங்கா கடற்படையினரால் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை வடமராட்சி மாணவர்களாகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்தச் சம்பவம் அனைத்துத் தமிழ் மாணவர் உள்ளங்களிலும் உதிரக்கொதிப்பை ஏற்படுத்தியிருப்பதோடு தமிழ் மாணவர்கள் தங்கள் தாயகப் பகுதியில் சுதந்திரமாக நடமாடுவதில் அச்சுறுத்தல்களையும் ஏற்படுத்தியுள்ளது.

கடந்த சில வாரங்களாக ஸ்ரீலங்காப் படையினர் தமது உயர் பீடத்தின் வழிகாட்டலுக்கு அமைவாக தமிழ் மாணவர்கள் மீது தொடர்ச்சியாக கொடூரமான தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். தொடர்ச்சியாகத் தாக்குதல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதால் வீறுகொண்டு எழுந்து நிற்கும் தமிழ் மாணவர்களை அடிபணியச் செய்ய முடியும் என்ற உத்தியுடன் அவர்கள் செயற்படுகின்றனர்.

சிங்கள இனவெறிப் படைகளின் இத்தகைய கொடூரமான தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணமேயுள்ளதால் தமிழ் மாணவர்கள் பொங்கிக் கொதிக்கின்றார்கள். தமிழ் மாணவர்களின் அகிம்சை வழிப் போராட்டத்தை இனவெறிப் படைகள் ஆயுத முனையில் அடக்குவதால் தமிழ் மாணவர்கள் தம்மை தற்காத்துக்கொள்ளத் தயாராகிவிட்டனர்.

தமிழ் மாணவர்கள் இன்று பொங்கி எழுவதற்கு காரணமானவர்கள் ஸ்ரீலங்கா அரசும், அதனுடன் சேர்ந்தியங்கும் ஒட்டுக் குழுக்களும் என்பதைத் திட்டவட்டமாகக் கூறுகின்றோம்.

தமிழ் மாணவர் சமூகத்தினர் மீது ஸ்ரீலங்கா அரசினால் கல்வித் தரப்படுத்தல் என்ற வன்முறை முன்னர் கட்டவிழ்த்து விடப்பட்ட போது அவர்கள் ஆயுதம் ஏந்திப் போராடத் தள்ளப்பட்டார்கள். இன்றும் நாமும் அதே போன்று ஆயுதம் ஏந்திப் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றோம்.

எனவே, சிங்கள அரசே! தமிழ் மாணவர்கள் மீதான தாக்குதல்கள் தொடருமாயின் தமிழீழத் தேசியத் தலைவரின் கீழ் மாணவர்களாகிய நாம் அணிதிரண்டு தமிழீழத்தைப் பிரகடனப்படுத்தும் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுக்க அது வழிவகுக்கும் என எச்சரிக்கின்றோம் - என்று அதில் உள்ளது. (எ-70)

# ஓய்வூதியர்களுக்கு மேலதிகமாக வாழ்க்கைச் செலவுப்படி ரூபா 500

அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவைக் கருத்திற்கொண்டு 500 ரூபாவை ஓய்வூதியர்களுக்கு வாழ்க்கைச் செலவுப் படியாக வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஓய்வூதியத்திணைக்களப் பணிப்பாளர் கே.பி.திலகரத்தன தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டு ஜனவரி மாதம் முதல் சகல ஓய்வூதியர்களுக்கும் அவர்களது ஓய்வூதியத்தின் 10 சதவீதம் அல்லது 500 ரூபா, இதில் எது அதிகமோ அத்தொகை அதிகரிக்கப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த அதிகரிப்புக்கு ஆயிரத்து 250 ரூபா உச்ச வரம்பாக இருந்தது. இதன்படி 2004ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற சகல ஓய்வூதியர்களுக்கும் 500 ரூபா முதல் ஆயிரத்து 250 ரூபா வரை ஓய்வூதிய அதிகரிப்பு வழங்கப்படவிருந்தது.

இந்நிலையிலேயே குறிப்பிட்ட ஓய்வூதிய அதிகரிப்புக்கு மேலதிகமாக 500 ரூபாவை வாழ்கைச் செலவுப்படியாக வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனால் ஓய்வூதியம் பெறுபவர்கள் இவ்வாண்டு ஜனவரி மாதம் முதல் குறைந்தது 500 ரூபா முதல் ஆயிரத்து 750 ரூபாவுக்கு மேற்படாத தொகையை மேலதிகமாகப் பெற உள்ளனர்.

குடிசார், ஆசிரிய, பாதுகாப்புப்படை மற்றும் உள்ளூராட்சி சேவைகளைச் சேர்ந்த சகல ஓய்வூதியர்களும் இந்த ஓய்வூதிய அதிகரிப்பைப் பெறத் தகுதியுடையவர்களாவர். அத்துடன் விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறுவோரும் இந்த ஓய்வூதிய அதிகரிப்பைப் பெறத் தகுதியுடையவர்களாவர்.

இந்த விடயம் தொடர்பான சுற்றறிக்கை சம்பந்தப்பட்ட சகல திணைக்களங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பணிப்பாளர் தெரிவித்தார். (ஒ-117-205)

## மலேரியாத் தாக்கம் குறைந்துள்ளது

குருநகர்,ஜன.7

யாழ்.மாவட்டத்தில் மலேரியா நோயின் தாக்கம் குறைவடைந்து வருவதாக யாழ். மலேரியாத் தடைஇயக்க பிராந்திய பொறுப்பு வைத்திய அதிகாரி கே.ரி.சிவபாதம் தெரிவித்துள்ளார். கடந்த வருடத்தில் 22 நோயாளிகள் மட்டுமே இங்கு இனங் காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(ஒ-51)

# சி.ஐ.சி. நிறுவன உரங்களுக்கு கட்டுப்பாட்டு விலை அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.7

சீ.ஐ.சி. நிறுவனம் உற்பத்தி செய்து சந்தைப் படுத்தும் உரங்களுக்கான கட்டுப்பாட்டு விலையை தமிழீழ நிதித்துறையின் விலைக்கட்டுப்பாட்டுப் பகுதி அறிவித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை முதல் நடைமுறைக்கு வந்துள்ள உரங்களின் விலை வருமாறு:-

ரீ.எஸ்.பீ.(50 கிலோக்கிராம்) உரத்தின் வன்னிப் பகுதி விற்பனை விலை ஆயிரத்து 628 ரூபாவும் யாழ்.மாவட்ட விற்பனை விலை ஆயிரத்து 649 ரூபாவும் ஆகும்.

எம்.ஓ.பி.(50 கிலோக்கிராம்) உரத்தின் வன்னிப் பகுதி விற்பனை விலை ஆயிரத்து 706 ரூபாவும் யாழ்.மாவட்ட விற்பனை விலை ஆயிரத்து 727 ரூபாவும் ஆகும்.

வி.01.(50 கிலோகக்கிராம்) உரத்தின் வன்னிப் பகுதி விற்பனை விலை ஆயிரத்து 678 ரூபாவும் யாழ்.மாவட்ட விற்பனை விலை ஆயிரத்து 649 ரூபாவும் ஆகும்.

ரீ.டி.எம்.(50 கிலோக்கிராம் உரத்தின் வன்னிப் பகுதி விற்பனை விலை ஆயிரத்து 103 ரூபாவும் யாழ்.மாவட்ட விற்பனை விலை ஆயிரத்து 124 ரூபாவும் ஆகும். (ஒ-202)



அமரர் யோ.செல்வகுருவின் ஓராண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அண்மையில் வல்வை நெடியகாட்டு மக்களால் இரத்ததானம் வழங்கப்பட்டது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் நடமாடும் இரத்த வங்கிச் சேவைப் பிரிவின் பொறுப்பாளர் டாக்டர் இ.சங்கர், வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் [illegible] பெருமாள் ஆகியோரின் மேற்பார்வையில் இரத்ததானம் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம் இது. (படம்: சி.சுந்தரலிங்கம்)

# ஆசிரியர் பதவியுயர்வுக் கடிதங்களை படிப்படியாக வழங்க நடவடிக்கை

### வடக்கு-கிழக்கு மேலதிகக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

காரைதீவு,ஜன.7

வடக்கு-கிழக்கு மாகாண பாடசாலைகளிலிருந்து பதவியுயர்வுக்கு விண்ணப்பித்த ஆசிரியர்களுக்கான பதவியுயர்வுக் கடிதங்கள் படிப்படியாக அனுப்பிவைக்கப்படுகின்றன என மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ரி.பொன்னம்பலம் தெரிவித்தார்.

ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. அவற்றுள் ஆசிரியர் சேவை தரம் 1, வகுப்பு 2 தரம் 1 ஆகிய வகுப்புகளுக்குப் பதவியுயர்வு பெறுவோரின் விண்ணப்பங்கள் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பப்படும். ஏனையவற்றை எமது மாகாணக் கல்வி அமைச்சு செய்யும் விண்ணப்பங்களை எமக்கு வலயக்கல்விக் காரியாலயங்கள் அனுப்பி வைத்த ஒழுங்கில் ஆசிரியர் பதவியுயர்வுக் கடிதங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. இதில் சந்தேகம் இல்லை.

இதற்காக யாரும் யாரிடமும் கையூட்டுக் கொடுத்து அலைய வேண்டிய அவசியமில்லை எனப் [illegible] பலம் மேலும் கூறினார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அன்னையை வாழ்த்துகின்றோம்



அகவை 81 நிறைவுறும் ஆன்மீக அன்னை சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி
**தங்கம்மா அப்பாக்குட்டி** (J.P.)
அவர்களை பல்லாண்டு பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,**
**ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.** (45098)(30)

---

சிவத்தமிழ்ச் செல்வி **தங்கம்மா அப்பாக்குட்டி**
**அவர்கள் 07.01.2006 இல் 81 ஆவது அகவையில்**



அம்மையின்
சைவப்பணி தொடரவும்
தமிழ்ப்பணி தழைக்கவும்
கல்விச் சேவை தொடரவும்
பொதுப்பணி ஓங்கவும்
எல்லாம் வல்ல ஸ்ரீ துர்க்காதேவி
அம்மன் அருள் புரிய
வாழ்த்துகின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள்.**
**யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்.** (சி-47258)

---

## கட்டடம் வாடகைக்கு வழங்கல்

கோண்டாவில், கே.கே.எஸ்.றோட், தாவடிச்சந்தி பிரதான வீதியில் சங்கத்திற்குச் சொந்தமான 50' நீளமும் 25' அகலமும் கொண்ட மேல்மாடிக்கட்டடம் [காரியாலயப் பாவனைக்கு உகந்த] வாடகைக்குண்டு. பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் கே.கே. எஸ் வீதி தாவடிச்சந்தி, கோண்டாவிலில் அமைந்திருக்கும் எமது தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

முற்பண, வாடகை என்பன பேசித்தீர்மானிக்கப்படும்.

**தலைவர்,**
கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்கம்,
கே.கே.எஸ்.றோட்,
தாவடிச்சந்தி, கோண்டாவில்.

**தொ.பே.இல.0212223539** [சி.47256] [39]

---

## வீடு வாடகைக்கு

'யாழ்ப்பாணம், இராமலிங்கம் வீதியில் நல்லூருக்கும் பூங்கனிச்சோலைக்கும் இடையில் ஐந்து அறைகளைக் கொண்டதும் இணைந்த குளியலறைகள் மூன்றும் குளிரூட்டப்பட்ட அறைகள் இரண்டும் கொண்டதுமான விசாலமான வீடு அமைதியான சூழலில் வாடகைக்கு உண்டு. அலுவலகம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உகந்தது.

தொடர்புகளுக்கு:
**M.விஜயன்**
**(பூங்கனிச் சோலை)**
**T.P.: 0776179105**
(45087) (24)

---

## பதவி வெற்றிடம்

01. பதவி : **கணக்குப் பதிவாளர்**
02. குறியீடு : 301/13
03. சம்பள அளவுத் திட்டம் : 4000 - 5550
75X10-80X10

அத்துடன் சங்கம் வழங்கும் இதர படிகள் 1250+2500 = 3750/=

04. பதவி எண்ணிக்கை : 01
05. கல்வித் தகைமை : கூட்டுறவுப் பணியாளரின் 14ஆவது சம்பளத் திட்டத்தில் இரண்டு வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 15ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்கியல் பதவியில் நான்கு வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

க.பொ.த.(சாதாரண தரம்) இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/வர்த்தக எண்கணிதம்/தூயகணிதம், சிங்களம்/ தமிழ் என்பவற்றை உள்ளடக்கியதாக 5 திறமைச் சித்திகளுடன் கூட்டுறவுச் சங்கம் ஒன்றில் லிகிதர் பதவியின் 2 வருடத்துக்குக் குறையாத அனுபவம்.

06. வயது விண்ணப்ப முடிவு திகதியில் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது. சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சங்கம் கோரும் பிணை ரொக்கமாகவும் ஆதனமாகவும் செலுத்த வேண்டும்.

*விண்ணப்ப முடிவு திகதி* : **31.01.2006**

விண்ணப்பங்கள் யாவும் தலைமை அலுவலகத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பித்தல் வேண்டும்.
விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:

**பொது முகாமையாளர்,**
**கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்கம்,**
**கே.கே.எஸ்.றோட்,**
**தாவடிச் சந்தி,**
**கோண்டாவில்.**

எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கணக்குப் பதிவாளர், குறியீட்டு இல. 301/13 எனக் குறிப்பிடல் வேண்டும்.

(சி/47257)(42)

---

# கலைப்பேரரசு நினைவு விருது நவாலியூர் செல்லத்துரைக்கு

யாழ்ப்பாணம்,ஜன.7

கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை நினைவாக வருடம் தோறும் வழங்கப்படும் விருதுக்கு மூத்த நாடக்கலைஞர் நவாலியூர் தா.செல்லத்துரை தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

நாடகத்துறையில் சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவம் பெற்றுள்ள கலைஞர் தா.செல்லத்துரை சமய கலாசார அலுவலக அமைச்சினால் கலாபூசணம் விருது வழங்கிக்கௌரவிக்கப்பட்டவர். நூற்றுக்கு அதிகமான நாடகங்களை எழுதிய நவாலியூர் செல்லத்துரை அவற்றில் பிரதான பாத்திரம் ஏற்றும் நடித்துள்ளார். நவாலியூரான் என்ற பெயரில் இவர் கவிதைகளையும் எழுதியுள்ளார்.

இந்த நினைவு விருது வழங்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் கலாநிதி க.குணராசா (செங்கை ஆழியான்) தலைமையில் நடைபெறும். நிகழ்வில் மங்கள விளக்கினை பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை ஏற்றிவைப்பார். ஆசியுரைகளை நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், அருட் திரு ரூபன் மரியாம்பிள்ளை ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.



தொடர்ந்து செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் வாழ்த்துரையையும் ''கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை யின் கலைப்பங்களிப்பு'' என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவும் நிகழ்த்துவர்.

(எ)

---

## கலை, முகாமைத்துவபீட கற்கைநெறிகள் ஆரம்பம் என அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.7

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடம் மற்றும் வணிக முகாமைத்துவப் பீடங்களின் சகல வருட மாணவர்களுக்குமான கற்கை நெறிகள் கடந்த 2ஆம் திகதி முதல் மீள ஆரம்பிக்கப்பட்டு சுமுகமாக நடைபெற்று வருகின்றன என்று பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வருட இறுதியில் நடைபெற்ற அசம்பாவிதச் சம்பவங்களால் இடைநிறுத்தப்பட்ட பல்கலைக்கழகத்தின் கற்றல் செயற்பாடுகள் மீண்டும் கடந்த 2ஆம் திகதி முதல் மீள ஆரம்பிக்கப்பட்டமை தெரிந்ததே.

(எ-202)

## சொற்பொழிவு

குடத்தனை,ஜன.7

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வடக்கு வீதியில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் வாராந்த நிகழ்வில் நாளை ஞாயிற்றுக்கிழமை 'திருமால் செய்யும் வழிபாடு' என்னும் தலைப்பில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர் சைவப்புலவர் க.கமலநாதன் சொற்பொழிவு நிகழ்த்துவார். (எ-78)

---

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 250xxx கைஏஸ் (Hiace) பிரயாணிகள் வாகனம் விற்பனைக்குண்டு.

தொடர்பு: **ராஜா திரையரங்கு**
T.P. 021-222 7334, 021-222 7332
(C/47260)

---

### திருத்தம்

உதயன் 04.01.2006 ஆம் திகதிய நான்காம் பக்கத்தில் பிரசுரமான திருமதி சுந்தரேஸ்வரி சபாரத்தினத்தின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி விளம்பரத்தில் -

மறைந்த தினத்துக்கு மேலே உள்ள வாசகம் கண்நெகிழ என்றே பிரசுரமாகியிருக்க வேண்டும். கண்மகிழ என்று தவறு தலாக அச்சாகிவிட்டது.

---

## அனுமதியின்றி மணல் ஏற்றியதற்கு அபராதம்

தென்மராட்சி,ஜன.7

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றி வந்த லொறிகளின் உரிமையாளர்களுக்கு ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட இந்த இரு வழக்குகளையும் விசாரித்த நீதிவான் ஒரு லொறிக்கு 80 ஆயிரம் ரூபாவும் மற்றைய லொறிக்கு 50 ஆயிரம் ரூபாவும் அபராதமாக விதித்தார்.

(ஒ-117)

---

## துயர்பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் நூலக உதவியாளர் **திரு.பா.பிரபாகரன்**
அவர்களின் அன்புத் தந்தை
கலாபூசணம் **வே.க.பாலசிங்கம்**
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன், அவரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**கல்லூரிச் சமூகம்,**
(45099) **யா/சிதம்பரக் கல்லூரி, வல்வெட்டித்துறை.**

---

## மரண அறிவித்தல்

### கனகசபை பஞ்சலிங்கம்



பூதர்வளவு, அச்செழுவைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட கனகசபை பஞ்சலிங்கம் 05.01.2006 வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை- செல்லாச்சிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் திரு திருமதி.சுப்பிரமணியம் தம்பதியரின் அன்பு மருமகனும் லலிதாவின் அன்புக் கணவரும் தனுஷா,டினோஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும் மகாலட்சுமி, தியாகலிங்கம், சுந்தரலிங்கம் (ஜேர்மனி),அமிர்தலிங்கம் ,யோகலிங்கம் (எரிபொருள் முகாமையாளர், நீர்வேலி பா.நோ.கூ.சங்கம்) ஆகியோரின் சகோதரனும் நடராசா, பவானி (ஆசிரியை-சைவத் தமிழ் வித்தியாலயம், உரும்பிராய்), யோகேஸ்வரி (ஜேர்மனி), கலாவாணி, அருந்ததி (முகாமைத்துவ உதவியாளர், அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Mrs. L. Punchalinganm,
60 ILex Road,
Willexlen, N W 10, UK.
T.P.: 00442084274219. (45103)

தகவல்:
க.யோகலிங்கம்,
பூதர்வளவு, அச்செழு, நீர்வேலி.
தொ.பே.: 077 9050174

---

## நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



இருவர் உறவில் **12-04-1935** | இறைவன் தெரிவில் **09-12-2005**

திருமதி
**பவளம் வயிரமுத்து**

09.12.2005 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவியின் மரணச்செய்திகேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி, தொலைநகல் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், மலர் வளையம் வைத்தும் துண்டுப் பிரசுரமூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும் மற்றும் பலவழிகளிலும் எமக்கு உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (07.01.2006) சனிக்கிழமை காலை 7 மணிக்கு அந்தியேட்டிக் கிரியைகள் கீரிமலைத் தீர்த்தக் கரையிலும் வீட்டுக் கிருத்தியங்கள் நாளை (08.01.2006) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணிக்கு எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பமாக வருகைதந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

வ.சந்திரசேகரம் (கிராம அலுவலர் யா/102),
'சுகுணபவனம்' கோண்டாவில் வடக்கு.
T.P.: 0212225192 (46100)

**- குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கில் மூன்றே முக்கால் பரப்புக் காணியில் அமைந்துள்ள 4 அறைகள் கொண்ட வீடு, தனிக்கிணறு பிரயோசனங்களுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 0777 079746. (சி-47197)

## விற்பனைக்கு

NP.JZxxx தொடரிலக்கமுடைய TVS GLX மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: காந்தன் T.P.:0773248820 (45073)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broilor மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (44843)

புறொயிலர் மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம்செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) வீனஸ் பாம், பலாலி வீதி, திருநெல்வேலி சந்தி (நல்லூர் பிரதேச செயலகம் முன்பாக) புதன், சனி, ஞாயிறு தினங்களில் அரசடி, கஸ்தூரியார் வீதியில் உள்ள வீனஸ் பாமிலும் பெற்றுக்கொள்ளலாம். பொதி செய்யப்பட்ட புறொயிலர் 1Kg 180/-, முட்டை விலை 9/- (44556)

## வாடகைக்குண்டு

மருத்துவபீடத்தில் கல்வி கற்கும் அல்லது வேலை பார்க்கும் இரு பெண்களுக்கு அறை வாடகைக்குண்டு. தொடர்பு: 49, பலாலி வீதி, கந்தர்மடம். (44866)

## வீடு வாடகைக்குண்டு

வண்.மேற்கு ஆறுகால்மடத்தடியில் இரண்டு/மூன்று பெண்கள் வசிப்பதற்கு ஏற்ற பகுதி வீடு (Annex) குறைந்த வாடகைக்கு உண்டு. தொடர்பு: 2777, மே/பி உதயன். (45080)

பருத்தித்துறை வீதியில் 3ஆம் கட்டையடியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: T.P.:0779077232, 0779070232 (44999)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1965 உத்தரம், கன்னிராசி, 23¾ கிரகபாவம், உயரம் 5'3'', B.Sc.(Hons) Mphil விரிவுரையாளரான மகளுக்கு பட்டதாரி, ஆசிரியர், அரசபணி, U.K. குடியுரிமையுடைய தகுதியான மணமகன் தேவை. தொடர்பு: SHIVAALAYA International Marriage Bureau, No.11, Jamuna Street, Jaffna. Sri lanka T.P.: 0776528641 (45061)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 09.01.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், சுட்டிபாம் - வட்டுக்கோட்டை, ஜங்கரன்களஞ்சியம் - திருநெல்வேலி, நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (44844)

## மோட்டார் சைக்கிள், கார் வாடகைக்கு

மணித்தியாலம் மற்றும் நாளாந்த வாடகைக்கு இருபாலாருக்கும் மோட்டார் சைக்கிள், மோட்டார் கார் வாடகைக்கு வழங்கப்படும். அத்துடன் குளிரூட்டப்பட்ட திருமணக்காரும் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 360/10, பிரதான வீதி, (பஸ்தியான் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம். T.P.: 0212229154, 0777593722, 0776991899 (43206)

## விற்பனைக்கு

*டயரிகள், கலண்டர்கள் (பெரிய, சிறிய) மலிவு விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.*

ஸ்ரீலங்கா புத்தகசாலை
*234, கே.கே.எஸ்.வீதி,*
(சி/47222)(32-11-17) *யாழ்ப்பாணம்.*

## தவறிவிட்டது

அராலி வடக்கு, செட்டியார்மடத்தைச் சேர்ந்த சுந்தையா வேலுப்பிள்ளை என்பவரது தேசிய அடையாள அட்டை (இல. 353171461V) பேர்ஸுடன் 05-01-2006 அராலி வீதிக்கும் (இல.785) ஓட்டுமடத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கி.உதயநந்தினி, உதயன் பணிமனை, யாழ்ப்பாணம் அல்லது மேற்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (45078)

செல்வி தங்கசொரூபி தம்பையா என்பவரது தேசிய அ.அட்டை (795773282V) 02-01-2006 அன்று பண்ணாகத்திற்கும் முகமாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து T.P.:0776621882 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். இ.தம்பையா பண்ணாகம் தெற்கு, சுழிபுரம். (45062)

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன.7

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மன்றத் தலைவர் வீ.மகாலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் அமரர் ப.நமசிவாயம் நினைவாக புலமைப்பரிசில் நிதியம் அமரர் கு.தவராஜசிங்கம் நினைவாக விதவை நிதியம் ஆகியவற்றின் கொடுப்பனவுகள் நிதியம் வழங்கப்படவுள்ளன. (3-202)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 15 - 10 - 1924 |  | 07 - 01 - 2005 |

திருமதி
### சரஸ்வதி யேசுதாஸன்
(ஓய்வுபெற்ற ஆசிரியை)

எங்களைவிட்டுப் பிரிந்து ஆண்டொன்று சென்றுவிட்ட போதும் உங்கள் நினைவு எங்களை விட்டகலவில்லை அம்மா!
*உங்கள் ஆத்மாசாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

குளிர்ந்த வேலி,
கரணவாய்தெற்கு,
கரவெட்டி. (45082)(30-26-15-45)

பிள்ளைகள்:
ஜெயக்குமார், உதயகுமார்,
சூரியகலா, சாந்தினி.

## நீங்கா நினைவில்...

கோப்பாய் ஆசிரிய கலாசாலை மாணவி
திருமதி சு.காண்டீபன் அவர்களின் தந்தையார்

### சோமு வன்னியசிங்கம்

*அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கேற்பதோடு (31ஆம்) இந்நாளில் அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.*

*ஆசிரிய மாணவர்கள் 2ஆம் வருடம்,*
*கோப்பாய் ஆசிரிய கலாசாலை,*
(45071)(26-45-15) *துணுக்காய் வலயம்.*

## நீங்காத நினைவில் தீராத துயரம்



### கனகரூபசிங்கம் கமல்ஜித்

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(45067)(42-60-45-15)

வவுனியா. பிறின்ஸ் உணவகம்.

## VACANCIES

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

**MEDIA RESOURCE AND TRAINING CENTRE**

**Further our advertisement dated 14.12.2005 for entertaining application for the post of Instructor in Journalism (On Contract), the closing date of the applications have been extended upto 16.01.2006.**

**Registrar,**
**University of Jaffna, Sri Lanka, Jaffna.**
**2006.01.03** (c/47235)

## SHANTHIHAM (A.H.C.) - JAFFNA

**VACANCY - MASTER TRAINERS**

Applications are called for master Traniners on psycho - social component to our traning center.

**Eligibilities**

- Degree (Sociology / Anthropology or equivalent)
- Good command in English and Tamil languages.
- Knowledge, Skill, Attitude to conduct psyco - social and mental health traning programs.
- Good capacity in Monitoring, Reporting and Recording.
- Ability to prepare curriculum and training material.
- Skill in research activities and computer work is essential.
- Should posses valid motor cycle license.

Both sexes are encouraged to apply. Closing date, 18th January 2006

**Application to be mailed to :-**

Executive Director,
Shanthiham,
8/1, Katpaha Vinayagar lane,
Kachcheri Nallur Road, Jaffna. (C/47242)

## வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டம் (நிகோட்)

### வேலைத்தள பொறியியலாளருக்கான பதவி வெற்றிடம்

நிகோட் யாழ் மாவட்ட அலுவலகத்தில் வேலைத்தள பொறியியலாளருக்கான பதவிவெற்றிடத்தினை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் கல்வித் தகைமைகள், தொழில்சார் தகைமைகள், பிறந்த திகதி மற்றும் வேண்டிய தகவல்கள் அடங்கியதாக சுயவிவரப் பட்டியலைத் தயாரித்து 20.01.2006 ஆம் திகதிக்கு முன்பதாக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், நிகோட், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் எனும் விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பதவி** - வேலைத்தளப் பொறியியலாளர்
**தகைமை** - அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் B.Sc.Civil Engineering பட்டம்
**தெரிவு முறை** - தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு மிகவும் பொருத்தமான விண்ணப்பதாரிகள் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**க.கணேஷ்,**
(சி/47237)(26-45-15) அரசாங்க அதிபர், யாழ்ப்பாண மாவட்டம்.

## பின்னுறுதித் தீர்வை

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

வலத்தியஸ் யோசப் செல்வரட்ணம்
14/2, அடப்பன் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

வழக்காளி

வழ.இல. மணநீக்கம்/601

எதிர்

செல்வரட்ணம் பெண் பற்றிமா
சென். பற்றிக்ஸ் றோட், குருநகர்,
தற்பொழுது இத்தாலி
முகவரி தெரியாது

எதிராளி

இவ்வழக்கு 2005ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 24ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற நீதிபதி திரு.இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வந்தபோது வழக்காளியும் வழக்காளி சார்பில் சட்டத்தரணி திருமதி லிங்கா துரைராஜா அவர்களின் அனுசரணையுடன் சட்டத்தரணி திருமதி பவானி சற்குணராசா அவர்களும் பிரசன்னமாயிருக்க எதிராளிக்கு அழைப்புக்கட்டளை உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு திரும்பல் திகதியாகிய 09.11.2005ஆம் திகதி எதிராளி சமுகமின்மையால் இன்று ஒருமுக விளக்கத்திற்கு நியமிக்கப்பட்டதற்கு அமைய இன்று ஒருமுகவிளக்கத்திற்கு எடுக்கப்பட்டு வழக்காளியின் சாட்சியத்தை நெறிப்படுத்த அனுமதி கோரி மன்றின் அனுமதியுடன் வழக்காளியின் சாட்சியம் நெறிப்படுத்தப்பட்ட பின்னர் வழக்காளியின் பிராது வ1 என்று அடைத்த ஆவணம் வழக்காளி இன்று மன்றில் அளித்த சாட்சியம் ஆகியவற்றை மன்று வழக்கேட்டுடன் சேர்த்துப் பரிசீலித்து வழக்காளி பிராதில் கோரிய நிவாரணத்தைப் பெற தகுதியுடையவர் எனக் கண்டு பின்வருமாறு கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையே 1975ஆம் ஆண்டு ஆனி மாதம் 12ஆம் திகதி நிறைவேறிய பதிவுத் திருமணத்தை எதிராளி வேண்டுமென்று வழக்காளியை விட்டு வன்ம உறவறுப்புச் செய்த குற்றத்திற்காக இத்தால் இரத்துச் செய்து வெற்றும் வெறிதுமாக்கி கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

இப்பின்னுறுதித்தீர்வையின் பிரதி உதயன் தினசரிப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தல் மூலம் எதிராளிக்குப் பதில் சேவகம் செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் எதிராளி எதுவித நடவடிக்கையும் எடுக்கத் தவறும் பட்சத்தில் விதிக்கப்பட்ட காலம் முடிவடைந்ததும் இப்பின்னுறுதித் தீர்வையானது முற்றான தீர்வையாக்கப்படுமென கட்டளையிடப்படுகின்றது.

**2005ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 24ஆம் திகதி**

இ.த.விக்னராஜா மாவட்ட நீதிபதி.

வரைந்தது
லிங்கா துரைராஜா,
வழக்காளியின் சட்டத்தரணி.
(45075) (24-26-45-15)

நீதிமன்றின் கட்டளைப்படி
து.சிறீமோகன் பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவர்க்கவாயில் ஏகாதசி திருவிழா

வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய சுவர்க்கவாயில் ஏகாதசி திருவிழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

அதிகாலை 3.15 மணியிலிருந்து சுப்பிரபாதம், திருப்பள்ளியெழுச்சி, மூலவர் அபிசேகம், திருவனந்தப்பூசை, திருப்பாவை ஓதல், உதயபூசை என்பன இடம்பெற்று, காலை 6 மணிக்கு சுவர்க்கவாயில் தரிசனம் இடம்பெறும். தொடர்ந்து சுவாமி வசந்த மண்டபத்திற்கு எழுந்தருளி விசேட பூசைகள் இடம்பெறும்.

முற்பகல் 10.45 மணிக்கு ஆதிவேங்கடேசர் திருவீதியுலா வலம் வருவார். பிற்பகல் 4.15 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று சுவாமி வீதியுலா வருவார்.

மறுநாள் புதன்கிழமை துவாதசித் திருவிழா இடம்பெறும். (3-203)

* * *

அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலய சுவர்க்கவாயில் ஏகாதசி தரிசனம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை அதிகாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது. தொடர்ந்து காலை 8 மணிக்கு அபிஷேகமும் முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம்பெறும். முற்பகல் 11 மணிக்கு நாகவரத நாராயணப் பெருமான் தேரில் எழுந்தருளி வீதியுலா வருவார். மறுநாள் புதன்கிழமை அதிகாலை 2 மணிக்கு 1008 சங்காபிஷேகமும் அதிகாலை 4 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் 5 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (3-203)


### விற்பனைக்கு

K.T.V காட் TOP FIEL D றிசீவர் C Bn SAt பைகேச் 8 அடி டிஸ் றிசீவர் DVD 3500w Sony 5.1 Set உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0776183302 (or) 222 2863

(45072) (21.16.17)

### Refresh System

புதிய, பழைய கணனிகள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும். தொடர்பு: சுதுமலை, மானிப்பாய், 077-6279671, 077-3253104.

(44848)(21.16.17)

### HIGH SPEED INTERNET BROWSING

நல்லைக் கந்தன் நெற் கபே

OPEN : 9.00 a.m. TO 11.00 p.m.

62, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

தொ.பே. 021 222 2779

(47154) (21.16.17)

### தேவை

சுமன் கொமினிக்கேசனுக்கு பெண் பிள்ளை தேவை.

இல: 670, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், ஆலடிச் சந்தி.

T.P.:2851

(45064) (21.16.17)

### நாய்க்குட்டி விற்பனைக்கு

கிறேடன் 1½ மாதம் நிரம்பிய நாய்க்குட்டிகளும் டோமன் 1½ மாதம் நிரம்பிய நாய்க் குட்டிகளும் டோமன் 1½ வயது நிரம்பிய நாய்க்குட்டியும் (பூச்சி நீக்கப்பட்டு தடுப்பூசி போடப்பட்டவை) ஏழு மாதம் நிரம்பிய அல்சேசன், பொமேரியன் நாய்க்குட்டிகளும் விற்பனைக்கு உண்டு.

(சிரட்டைக் கரியும் மொத்த விற்பனைக்கு உண்டு)

தொடர்பு: பூம் பொழில்

நுணாவில், பருத்தித்துறை வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

T.P.:0776568166, 0776170686

(45074) (21.17.16)

### பெயர் மாற்றம்

18 SHELLEY CRESCENT SOUTH AIL MIDDLESEV UB1 2LQ, LONDON என்ற முகவரியில் தற்போது வசிக்கும் அந்தோனிப்பிள்ளை டீன்ஸ் நிஷாந்தலா ஆகிய நான் எனது பெயரை இன்று முதல் நிஷா என மாற்றிக்கொள்கிறேன் என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

London அ.நிஷா.

(45074)(21.17.16)

### தேவை

யாழ்.நகரில் இயங்கும் சன்றைஸ் மெடிகிளினிக்/ யாழ்.பேபி நீட்ஸ் என்பவற்றிற்கு பின்வரும் பதவிக்கு ஆள்கள் தேவை.

1. கொம்பியூட்டர் ஒப்பரேட்டர் - பெண்
2. மருந்து வியாபாரம் செய்பவர் - ஆண்/ பெண்
3. சிறு பிள்ளைகளின் உடைகள் வியாபாரத்தில் அனுபவம் உள்ளவர்கள் - பெண்

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

நேர்முகத்தேர்வு: 08.01.2006 (ஞாயிறு) 11 மணி

இடம்: சன்றைஸ் மெடிகிளினிக் (பஸ் ஸ்ராண்ட் முன்பாக) 388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(44963) (21.16.17)

### மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHO THERAPY)

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

06-01-2006 - 11-01-2006

முன்கூட்டியே பதிவுசெய்யவும்

இளைஞர்களே!

☼ சக்தி குறைவு ☼ ஞாபக மறதி ☼ பயம் ☼ நடுக்கம் ☼ நித்திரைக் குறைவு ☼ ஆண்மைக் குறைவு ☼ நீரிழிவு நோய் என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?

கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீக்க என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள். ஆண்மைச் சக்திக் குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம். பலர் இங்கே சிகிச்சை பெற்றுப் பூரண சுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.

குறிப்பு: இறுதி நேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்

தொடர்புகளுக்கு: பலரது பாராட்டைப் பெற்ற

பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P.ஆறுமுகம் S.M.P.

A.S.N. சுற்றுலா விடுதி,

392/A, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்

(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).

Govt. Regd. No. 9492

Hot Line: 0777 569205 T.P.: 3181, 5399

(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)

(சி-47223) (21.16.17)

### ஹட்டன் நஷனல் வங்கி

யாழ்ப்பாணக் கிளை

HATTON NATIONAL BANK LIMITED

#### அடகுப்பொருள்களை மீட்டல்/ விற்பனைக்கான அறிவித்தல்

எமது கிளையில் அடகுசேவை வசதிபெற்ற வாடிக்கையாளர் கவனத்திற்கு

நீங்கள் பெற்ற அடகுக்கடனுக்குரிய சீட்டின் மறுபக்கத்தில் குறிப்பிட்ட விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய அடகு வைக்கப்பட்டுள்ள பொருள்களை ஒரு வருட காலத்திற்குள் கடன் செலுத்தப்பட்டு மீட்கப்பட வேண்டும் என்பதனை மீண்டும் அறியத்தருகின்றோம்.

ஒரு வருட காலத்திற்கு மேற்பட்ட அடகுப்பொருள்களை மீட்க/காலாவதி திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளர்களின் அடகுப்பொருள்கள் ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

தவிர்க்கமுடியாத காரணங்களால் முன் அறிவிக்கப்பட்ட திகதியில் நடைபெறாத ஏலவிற்பனை இம்மாதம் 21-01-2006 அன்று நடைபெறும். இத்திகதிக்கு முன்னதாக உங்கள் அடைவு நகைகளை மீளப்பெற/திகதியை நீடிக்க ஆவன செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(சி-47239)(26.16.17) முகாமையாளர்.


### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 - 07 - 1942 | 08 - 12 - 2005 |



திருமதி சுந்தரலிங்கம் ஈஸ்வரிதேவி

திதி: 07.01.2006

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சு.ஈஸ்வரிதேவி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (07.01.2006) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலு மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

VC அடி, ஏழாலை வடக்கு. (45066) (32.16.17.21)

தகவல்: சு.சந்திராதேவி (சகோதரி).

### கண்ணீர் அஞ்சலி

#### சங்கரப்பிள்ளை வேலாயுதம்பிள்ளை

(இளைப்பாறிய வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர்)

எமது சங்கப் பகுதியைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை வேலாயுதம்பிள்ளை அவர்கள் இந்தியா வேலூரில் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைகிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன், அவரது இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அங்கத்தவர்கள், பணியாளர்கள், பணிப்பாளர்கள்.

தெல்லிப்பழை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், புகையிரத நிலைய வீதி, மல்லாகம்.

(சி-47247)(21.17.16)

### விஞ்ஞான பீடம்

#### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் இரண்டாம் அரையாண்டின் நடுக்கூற்று விடுமுறை (Mid-Semester Vacation) 17.01.2006ஆம் திகதி முடிவடைகிறது. 18.01.2006 புதன்கிழமை கல்விச் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பமாகும். செயற்பாடுகள் முற்பகல் 8.30 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை மட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.

பதிவாளர். (சி-47208)(21.16.17)


### POSTAL COURSES

ELECTRONIC & CELLULAR TECHNOLOGY

இலவசம் ரூ 5 முத்திரை, கடிதவுறை அனுப்பும் அனைவருக்கும் பொதுவான முதல் அலகு இலவசமாக அனுப்பிவைக்கப்படும். கற்கைநெறியின் தரத்தை அவதானித்து மேற்கொண்டு கட்டணத்தைச் செலுத்தி இணைந்து கொள்ளலாம்.



**A. Dip in Electronics (Repairing**

Basic Electronics, Digital Meters, Tr & IC Circuit Designing, Wireless Remote controlling & Transmitting, Radio Technology, TV Technology, VCD & DVD Technologies & Servicing. 5 months.

**Full Fee 2000/= (1000 + 1000)**

**B. Dip in Cellular (Repairing)**

Cellular Batteries, Analog & Digital, AF & RF, G.S.M Networks, Service Softwares, Service Diagrams, Professional Tools & Cables, Introduction of Computer Hardware, Total Phone Service. 3 month.

**Full Fee 1400/= (1000 + 400)**

கட்டணத்தினை நேரடியாக அல்லது வங்கியூடாக அல்லது மணியோடர் மூலமாக செலுத்தலாம். HNB Bank - 0090651986, Commercial Bank - 8100025135, Name - Marconi Technical Institute, Branch - Wellawatte, Account Type - Saving Account மணிஓடர் பத்திரமாயின் பணம் கொடுபடவேண்டிய இடம் - Wellawatte Post office, பெறுபவரின் பெயர் - Manager, Marconi Technical Institute Bankல் அல்லது Post officeல் பெற்ற ஒரிஜினல் பற்றுச் சீட்டையும், தெளிவாக எழுதப்பட்ட உங்கள் முகவரியையும் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**MARCONI TECHNICAL INSTITUTE**

410, 2nd Floor, Galle Road, Wellawatta.TP: 2361362


### எட்டாம் ஆண்டு நினைவலைகள்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 16 - 08 - 1936 | 07 - 01 - 1998 |



அமரர் மாணிக்கம் பொன்னம்பலம்

(Drilling Foreman, Irrigation Dept.Colombo)

திதி:07.01.2006

ஆண்டுகள் எட்டு உருண்டோடிப் போய் விட்டது
உங்கள் உடல் மட்டும் தான் எங்களை விட்டுப் பிரிந்தது
ஆனால் நீங்கள் கண்ணின் கண்மணிகளைப் போல்
இந்தக் கண்மணிகளோடு காற்றாய், மரமாய், ஒலியாய்
ஒளியாய், அருவமாய், உருவமாய், அருவுருவமாய்
வாழ்ந்து கொண்டு இருக்கிறீர்கள் உங்கள் ஆத்மா
சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு. (45076) (39.16.17.21)

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 - 01 - 1934 | 30 - 12 - 2003 |



அமரர்

கந்தசாமி குழந்தைவேலு (தம்பியண்ணா)

திதி:07.01.2006

ஆண்டுகள் இரண்டு தான் சென்றாலும்
ஆறவில்லை எம் துயரம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும்
ஆண்டவனை வேண்டுகிறோம்

இராசாதேவி (மனைவி), மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

கல்லூரி வீதி, பருத்தித்துறை. (44933) (21.17.45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூரண ஹர்த்தாலால் நேற்று திருகோணமலை செயலிழப்பு

திருகோணமலை, ஜன.07

திருகோணமலையில் கடந்த திங்கட்கிழமை ஐந்து தமிழ் மாணவர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து அங்கு நேற்றுத் தொடர்ந்து ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதேவேளை, திருகோணமலை மாவட்டத்தின் இயல்பு நிலை நேற்று முற்றுமுழுதாக ஸ்தம்பித்தது.

நகரத்தின் அனைத்துக் கடைகளும் மூடப்பட்டிருந்தன. பாடசாலைகள், அரச அலுவலகங்கள், வங்கிகள், போக்குவரத்துச் சேவைகள் என்பன முற்றுமுழுதாக இயங்கவில்லை.

நகரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக இராணுவத்தினரும், பொலிஸாரும் வீதிகளில் குவிக்கப்பட்டிருந்தனர்.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான மூதூர் கிழக்கு, வெருகல், ஈச்சிலம்பற்று பகுதிகளிலும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. அரசகாரியாலயங்கள், வர்தத கஸ்தாபனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பனவும் இயங்கவில்லை. போக்கு வரத்தும் நடைபெறவில்லை.

மூதூர் கிழக்கிலிருந்து தமிழ் மக்கள் நேற்று மூதூர் நகருக்கு செல்லவில்லை. மூதூர் நகரிலும் சில அரச காரியாலயங்கள் இயங்கவில்லை. முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்களும் பூட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கிளிவெட்டி, பட்டித்திடல், மல்லிகைத்தீவு, கங்குவேலி, பச்சைநூர், பாலத்தடிச் சேனை போன்ற பகுதிகளிலும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. வெருகல் பிரதேச மாணவர் ஒன்றிய ஏற்பாட்டில் அங்குள்ள 16 பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 3000 மாணவர்கள் நேற்றுக்காலை 10 மணியளவில் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் ஈடுபட்டனர். மாவடிச்சேனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையிலிருந்து ஆர்ப்பாட்டப் பேரணி ஆரம்பமானது. பூநகர் சந்திவரை வந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கு இராணுவத்திற்கெதிராகக் கோஷங்களை எழுப்பியதுடன், படையினரின் செயற்பாடுகளைக் கண்டிக்கும் துண்டுப்பிரசுரங்களையும் மக்களுக்கு விநியோகித்தனர்.

இதேவேளை, முற்பகல் 11 மணியளவில் மூதூர் கிழக்கிலுள்ள 18 பாடசாலைகளிலிருந்தும் சுமார் 5ஆயிரம் மாணவர்கள் ஒன்றிணைந்து சேனையூர் மத்திய கல்லூரியில் ஒன்றுகூடி ஆர்ப்பாட்டப் பேரணியாக கடற்கரைச்சேனை, நாவலடிச் சந்தியை வந்தடைந்து அங்கு எழுச்சிக் கூட்டத்தை நடத்தினர். இதில் ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

திருகோணமலை மாவட்டத்தில் இராணுவத்துக்கெதிரான மாணவர்களின் எழுச்சிப்போராட்டம் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் நிலையில் எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை கடற்கரைச்சேனை பொதுவிளையாட்டு மைதானத்தில் தமிழீழத் தேசிய எழுச்சிப்பிரகடன நிகழ்வு இடம்பெறவிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-க)


## த சாரிகா லேணர்ஸ்

### யாழ். மாவட்டத்தில் முதல்தர சாரதி பயிற்சி நிலையம்

எமது நிறுவனத்தின் ஊடாக சாரதி அனுமதிப் பத்திரத்திற்கு விண்ணப்பித்தோருக்கு கனரக வாகனத்திற்கு (A.D) எழுத்துப் பரீட்சை 9ஆம் திகதியும் செய்முறை (ரயல்) ஞாயிறு காலை 8.30 மணிக்கு நடைபெற இருப்பதாலும் சிறிய ரக வாகனத்திற்கு (CC 1'D) பரீட்சைகளும் நடைபெற இருப்பதால் அனைவரும் உடனடியாகக் காரியாலயத்திற்கு சமுகம் தரவும்.

நிர்வாகம்

தொ.பே.: 021222 8059 (சி-45113)
777 063893 (54-11-34) 38, கந்தப்ப சேகரம் வீதி, யாழ்.


## கண்ணீர் அஞ்சலி



### பஸ்ரியாம்பிள்ளை நீக்கலஸ்

(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

*நித்தம் நிறை வதனம் காட்டி வருவீர்*
*நித்திய உறக்கம் கொண்டீரோ இன்று*
*பக்தியாகி பரிவுடனே பரமபிதா தொண்டனாகி*
*பரலோகம் சென்று விட்டீர் எம் நண்பனவன்*
*மலோவினிடம் என்று நீர் மீளவந்து எமக்கெல்லாம்*
*நிஜமாகி நிழல் தருவீர்.*

எமது நிறுவனத்தின் நண்பர்கள் மலோவினுடைய தந்தையாரது நித்திய பேரின்ப உறக்கத்துக்காகப் பிரார்த்திக்கும் .

(சி-47263) (54-11-34)
*நெல்லியடி.* மொடேன் ஸ்ரோர்ஸ், நண்பர்கள்.

## மரண அறிவித்தல்

### பஸ்ரியாம்பிள்ளை நீக்கலஸ்



(இளைப்பாறிய தபாலதிபர்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய தபாலதிபர் பஸ்ரியாம்பிள்ளை நீக்கலஸ் அவர்கள் நேற்று (06.01.2006) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சூசைப்பிள்ளையின் அன்புச் சகோதரனும் பிரான்சிஸ்காவின் (பூமணி) அன்புக் கணவரும் செல்வரஞ்சினி, யசிந்தா ஜெயராணி (பிரான்ஸ்), நீற்றா செல்வராணி (பிரான்ஸ்), அனற் (சுவிஸ்), மெலோஞானசீலன் (தபாலகம், கரவெட்டி) ஆகியோரின் அருமைத் தந்தையும் யோகநாதன் (தபாலகம், கொடிகாமம்), ஜெயராஜா (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஜோன்ஸ்ரன், சத்யசுதன் (சுவிஸ்) ஆகியோரின் மாமனும் ஜஸ்ரினின் (பிரான்ஸ்) அன்பு மைத்துனரும் நிஷாந்தியா, அன்திறியா (பிரான்ஸ்), ஜெறோம், ஜெரோஷன், ஜெறோஷினி, ஜெசிக்கா (பிரான்ஸ்), சபீதா, சீனா, (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று (07.01.2006) சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரின் இல்லத்திலிருந்து கீரிப்பல்லி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*கரவெட்டி வடக்கு, கரவெட்டி.* (சி-47262) (54-11-34)
நீ. மெலோ ஞானசீலன் (மகன்).

## இரத்தினபுரியில் சுற்றிவளைப்பு 50 தமிழ் இளைஞர்கள் கைது

இரத்தினபுரி நகரில் நேற்றுக்காலை இடம்பெற்ற சுற்றிவளைப்பு தேடுதலின் போது 50 தமிழ் இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

படையினரும், பொலிஸாரும் இணைந்து நகரத்தின் பல வீதிகளை மூடி இந்தத் தேடுதல்களை நடத்தியதால் நகரத்தின் வழமையான இயல்பு நிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டது.

இரத்தினபுரி நகருக்குள் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் ஊடுருவியிருக்கக் கூடும் என்ற சந்தேகத்தில் இந்தத் தேடுதல் நடத்தப்பட்டிருக்கிறது. (ஐ-க)

## சிவத்தமிழ் செல்வியின் அறநிதிய சபை ஏற்பாட்டில் 'நளவெண்பா' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜன.7

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் பிறந்தநாள் அறநிதியச் சபையினால் வெளியிடப்படும் 'நளவெண்பா' நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

முற்பகல் 10 மணிக்கு ஸ்நபன அபிஷேகமும் தொடர்ந்து விசேட பூசையும் இடம்பெறும். முற்பகல் 11.30 மணியளவில் புகழேந்திப் புலவரின் நளவெண்பா நூல் (உரையுடன்) வெளியிட்டுவைக்கப்படும். நூல் வெளியீட்டைத் தொடர்ந்து மதியபோசனம் வழங்கப்படும். (எ)


### மனோகரா யாழ்ப்பாணம்



இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
சூர்யா, த்ரிஷா, வடிவேல் நடித்த
ஆறு
தினசரி: பு.நே.10.30, 1.30, 4.30, 7.30,10.30

### நாகம்ஸ் சுன்னாகம்

சிலம்பரசன் நடித்த
தொட்டி ஜெயா
தினசரி: புதியநேரம் 10.30, 2.30, 5.30

### நாதன்ஸ் யாழ்ப்பாணம்

அர்ஜுன், நமிதா, வடிவேல்
ஆணை
காட்சி நேரம்:
10.30, 2.00, 5.15, 8.15



### ராஜா யாழ்ப்பாணம்

உங்கள் சத்தியராஜ் (இருவேடம்)
சங்கவி, ஆனந்தராஜ் நடித்த
அய்யர் I.P.S


## மரண அறிவித்தல்கள்

### திருமதி பரமானந்தம் தேசோவதி

(வாணி)



யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை சிவலிங்கப்புளியடியைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளி பாண்டியந்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட தேசோவதி (வாணி) அவர்கள் நேற்று (06.01.2006) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும் பாண்டியந்தாழ்வைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லப்பா-சங்குப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பரமானந்தத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மயில்வாகனன் மற்றும் சாந்தா (கிளி), சுமதி (கருணா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பராசக்தி, சோதிலிங்கம், கார்த்திகேசு ஆகியோரின் அன்பு மைத்துனியும் மற்றும் கரிகரன் (தவம்-ஜேர்மனி), பங்கஜவதனி (ஜேர்மனி), இரவிக்குமாரி (ஹொலண்ட்), பிரபாகரன் (வட்டக்கச்சி), வசந்தகுமாரி (சுவிஸ்), கிருபாகரன் (ஜேர்மனி), ஜெயந்தி (ஆனந்தி), சிறிகரன் (லண்டன்), மதிவதனி (ஜேர்மனி), ஆகியோரின் அன்புத் தாயும். காலஞ்சென்ற யோகேஸ்வரி (ஜேர்மனி), ஜெயக்குமார் (ஜேர்மனி), தர்மகுணநாயகம் (ஹொலண்ட்), புஸ்பராணி (வட்டக்கச்சி), பரமலிங்கம் (சுவிஸ்), தேவநந்தினி (ஜேர்மனி), கருணாகரன் (கண்ணன்), கர்ஷி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் தயாநிதி, தாரணி, தக்சனா, தனுஷா, ஜெயவதனி, திவாகர், கரிஸ்டன், திசோவா, நிரோசா, பிரிந்தாவன், திலோஜன், மாதிணி, கரிப்பிரதா, ஆரதி, மாதுளன் (சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன்), கீத்திகா (சுண்டிக்குழி மகளிர் கல்லூரி மாணவி), பதுசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இருந்து 08.01.2006 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகத் துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*54/12, சந்தனமாதா கோயில் முன் ஒழுங்கை, பாண்டியந்தாழ்வு, யாழ்ப்பாணம்.* (45106) (54-11-34)
கரிகரன் (தவம்-மகன்), கருணாகரன் (கண்ணன் -மருமகன்).

### திருமதி ரெபெக்கா கிருபைரத்தினம் கனகரத்தினம்



(இளைப்பாறிய ஆசிரியர்)

அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் புத்தூர் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய ஆசிரியர் திருமதி ரெபெக்கா கிருபைரத்தினம் கனகரத்தினம் அவர்கள் நேற்று (06.01.2006) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் காலமானார்.

அன்னார் A.J.V. கனகரத்தினம் அவர்களின் பாசமிகு மனைவியும் ராஜினி, விமலினி ஆகியோரின் பாசமிகு தாயும் தவபாலன், தேவசேயன் ஆகியோரின் பாசமிகு மாமியும் சுமித்திரா, நிருபா, சோபனா, சத்தியன் ஆகியோரின் பேர்த்தியும் யோசுவா, ரெபெக்கா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பூட்டியும். செல்வானந்தம் (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற அருளானந்தம், கருணானந்தம், பரமானந்தம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (07.01.2006) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கிந்திட்டி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*புத்தூர் வடக்கு, புத்தூர்.* (45105) (54-11-34)
குடும்பத்தினர்.

### திருமதி காமாட்சி நடராசா



அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் அராலி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காமாட்சி நடராசா 05.01.2005 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும் விசுவநாதர்-விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வயிரவநாதன், பூலோகசிங்கம் மற்றும் தங்கராசா , போலிங்கம், செல்வலட்சுமி, சுந்திரமோகன் ஆகியோரின் அன்புத் தாயும் யோகராணி, நிர்மலராணி, மாலினி, யசோதரா, திலகரத்தினம்,செல்வராணி ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற நல்லமா, நடராசா மற்றும் வள்ளியம்மை, தம்பிராசா, ஏரம்பு, கற்பகம் ஆகியோரின் சகோதரியும் சுரேந்திரன், விஜயமலர், சஞ்சீவ்குமார், கணேந்திரன், ஜெயப்பிரகாஸ், ஜெயமயுரேஸ், தர்சினி, கோபிசாலினி, உமேஸ், உசாந்தினி, திரிசாந்தினி, குகப்பிரசாத்,சுஜீவன், சுதேசியா, சாருஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(08.01.2006) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12 மணி யளவில் நடைபெற்று, பூதவுடல் அராலி தெற்கு பூநாவோடை மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*அராலி மத்தி, அராலி.* (45104) (54-11-34)
ந.போலிங்கம் (மகன்).

### திருமதி பிலோமினா (பொன்மணி) சாமிநாதா

அச்சுவேலி, பத்தமேனியைப் பிறப்பிடமாவும் பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிலோமினா (பொன்மணி) சாமிநாதா அவர்கள் 01.01.2006 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி நல்லடக்க ஆராதனைக்காக இன்று (07.01.2006) சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் பூதவுடல் நல்லடக்கத்திற்காக பண்டத்தரிப்பு சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*தொ.பே.: 077 6030813 077 3604146* (சி-47261) (54-11-34)
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் அமைப்பு ஒரு விடுதலை இயக்கமே அல்ல; அல்கெய்டாவைவிட மோசமான கொலை 'மெஷின்'

## கண்டிப்புடன் செயற்பட அமெரிக்காவைக் கோருகிறார் அமைச்சர் மங்கள சமரவீர

வாஷிங்டன்,ஜன.7

'அல் - கெய்டா இயக்கத்திலும் பார்க்க படு அரக்கத்தனமான கொலை மெஷின்' என்று விடுதலைப் புலிகளை விமர்சித்துள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, புலிகள் விஷயத்தில் அமெரிக்க அரசு மெத்தனப் போக்கைக் கைவிட்டு கண்டிப்பான போக்கைக் கடைப்பிடிக்க முன்வர வேண்டும் என்று அமெரிக்க அரசை கேட்டுக்கொண்டிருக்கிறார்.

அத்தோடு, அஞ்ஞாதவாச தமிழ் குழுக்கள் பல புலிகளுக்கு நிதிஉதவி செய்து வருகின்றன. இது குறித்தும் அமெரிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு வாஷிங்டன் வந்திருக்கும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர 'வாஷிங்டன் டைம்ஸ்' என்ற பத்திரிகைக்கு இலங்கை அரசியல் தொடர்பாக பேட்டியளித்திருக்கிறார். அந்தப் பேட்டியிலேயே விடுதலைப் புலிகளை இப்படி சாடியிருக்கிறார்.

பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

''விடுதலைப் புலிகளுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகளை அமெரிக்க அரசு ஒரு விடுதலை இயக்கத்துக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாகி விடுமோ என்று அஞ்சத் தேவையில்லை. மாறாக அல்கெய்டாவிலும் பார்க்க மிக அரக்கத்தனமான கொலை வெறியர்களையே கையாளுகிறோம் என்பதை அமெரிக்கா உணர வேண்டும்.

விடுதலைப்புலிகளுக்கு எதிராக அமெரிக்கா கடும் நடவடிக்கையை எடுக்கும் அதே வேளை, அதன் நிழலாக இயங்கும் முன்னணி அமைப்புகளையும், தர்ம நிறுவனங்களையும் கூட ஒழித்துக் கட்டவும் வேண்டும். இவர்களே இந்த நவீன பயங்கரவாதத்தின் ஞானத் தந்தையர்களாவர்.

தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள், கடற்படைக் கலங்கள் மீதான அதிவேக படகுத் தாக்குதல்கள் போன்ற சில தாக்குதல் யுக்திகளைக் கூட புலிகளிடமிருந்துதான் அல்கெய்டா இயக்கத்தினர் தழுவிப்பற்றிக் கொண்டிருக் கிறார்கள். - என்றும் அவர் அப்பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

ஸ்தம்பித்துப்போயிருக்கும் சமாதான முன்னெடுப்புகளின் நிலை, நாட்டில் சமீப வாரங்கள் இடம்பெற்று வரும் வன்முறைகளின் பெருக்கம், விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை அமெரிக்காவுக்குள் இறுக்கமாக்குதல் ஆகியன தொடர்பாக அமெரிக்க அரச அதிகார மட்டங்களுடன் பேசுவதற்காகவே இலங்கை வெளிவிவகார அமைச்சர் வாஷிங்டன் வந்திருக்கிறார்.

கனடா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிலிருந்து புலிகளுக்கு நிதி உதவி போவதைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்த நாடுகள் எடுக்க வேண்டும் என்று இலங்கை விரும்புகிறது. இதற்கு அமெரிக்காவின் செல்வாக்கை இந்த நாடுகள் மீது பிரயோகிக்க வைக்கவும் இலங்கை விரும்புகிறது போலத் தெரிகிறது. விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்கு எதிராக சர்வதேச சமூகமும், ஏனையோரும் வெறும் கண்டன அறிக்கைகளை விடுவதோடு நின்றுவிடாமல் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்றும் இலங்கை எதிர்பார்க்கிறது.

தேநீரும், அனுதாபமும் இருந்தால் மட்டும்போதாது. ஆக்கபூர்வமாக அமெரிக்கா ஏதாவது முயற்சிகள் செய்ய வேண்டும் என்று மங்கள சமரவீர இந்தப் பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

### வடக்குக் கடலில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வல்வை ஊறணி வரையிலான கடற்பகுதியில் மீன்பிடித்தொழிலில் ஈடுபடுவோருக்கு இத்தடை விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றது.

தொண்டைமானாறு, மயிலிதனை, ஊரிக்காடு, வல்வெட்டித்துறை, ஊறணிப் பகுதி மீனவர்கள் இதனால் தொழிலை இழந்துள்ளனர்.

கடற்றொழிலாளர்களுக்கு எதிராக கடற்படையினர் மேற்கொண்டுவரும் கெடுபிடிகள் தொடர்பாக வட மாகாணக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்குத் தெரியப்படுத்தியுள்ளது. அரச அதிபருக்கும் உடனடியாக அறிவித்துள்ளது.

இதுதொடர்பாகக் கண்காணிப்புக் குழுவினர் வடபகுதிக்குப் பொறுப்பான கடற்படைத் தளபதியைச் சந்தித்துப் பேசினர் எனவும், தற்போது குடாநாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாகவே கடற்படையினர் இவ்வாறு நடந்துகொள்கின்றனர் எனவும் அங்கு கூறப்பட்டதாகவும் சமாச வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில் - வடக்குக் கடலில் மீனவர்கள் தொழில் செய்வதற்குப் படையினர் விதித்துள்ள தடையையடுத்து, யாழ். குடாநாட்டில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தங்கியிருந்து கடற்றொழிலில் ஈடுபட்டு வந்த தொழிலாளர்களின் குடும்பங்கள் இப்போது புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களுக்கு இடம்பெயரத் தொடங்கியிருக்கின்றன.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தங்கியிருந்து கடற்றொழில் செய்வதற்குக் கட்டுப்பாடு ஏதும் இல்லை என்பதாலேயே அக்குடும்பங்கள் இவ்வாறு இடம்பெயர்கின்றன.

கடந்த சில நாள்களில் இவ்வாறு 900 குடும்பங்கள் வரை கிழக்குக் கடலை அண்டிய பிரதேசங்களில் தொழில்செய்வதற்காகப் புலிகளின் வன்னிக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு இடம்பெயர்ந்துள்ளன என்று புலிகளின் புள்ளிவிவரப் பதிவுத் தகவல் ஒன்று தெரிவித்தது.

யுத்தநிறுத்த சூழ்நிலை சீர்கெட்டு வருவதன் வெளிப்பாடே அரச படைகளின் இந்தக் கெடுபிடி என மீனவ சங்கப் பிரதிநிதி ஒரு வர் தெரிவித்தார்.

(ஐ-க)

### நகரில் படை நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- காங்கேசன்துறை வீதியும் வைத்தீஸ்வரா வீதியும் சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ள இராணுவக் காவலரண்மீது மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த இனந்தெரியாதோர் கிரனேட் ஒன்றை வீசிவிட்டுத் தப்பிச் சென்றனர் எனவும், அந்தக் கிரனேட் காவலரணின் முன்பாக வீதியின் நடுவே வீழ்ந்தபோதும் வெடிக்கவில்லை. எனவும்இராணுவத்தரப்பு தெரிவித் தது.

கிரனேட் வீசப்பட்டதையடுத்துப் படையினர் வானத்தைநோக்கித் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். இதனால் யாழ். நகரப் பகுதியில் சிலமணிநேரம் பதற்றம் நிலவியது.

கடைகளில் இருந்த வர்த்தகர்களும் அன்றாட தேவைகளுக்காக யாழ். நகருக்கு வந்திருந்த பொதுமக்களும், பாடசாலை மாணவர்களும் திடீரெனக் கேட்ட துப்பாக்கி வேட்டுக்களால் பீதியடைந்து நாலாபுறமும் சிதறி ஓடினார்கள். இதனால், நகரப்பகுதி சிறிது நேரத்தில் வெறிச்சோடியது. நகரில் தரித்து நின்ற மினிபஸ்கள் பயணிகளை ஏற்றாமலே பாதுகாப்பான இடங்கள் நோக்கிப் பறந்தன.

கிரனேட் வீசப்பட்ட பகுதியில் உடனடியாகப் பெருமளவான படையினர் குவிக்கப் பட்டும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது. அத்துடன், அப்பகுதியூடான போக்குவரத்து தடைசெய்யப்பட்டது.

இதன்பின்னர் அவ்விடத்துக்கு வந்த இராணுவத்தின் வெடிகுண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர் கிரனேட்டை அகற்றினர்.

இதேவேளை -

யாழ். நகரில் அடைக்கலமாதா ஆலயத்துக்கு (ஓ.எல்.ஆர்)அண்மையில் உள்ள படைநிலை மீது நேற்றுமுன்தினம் இரவு வீசப்பட்ட கிரனேட் ஒன்றும் வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டது என்று படைவட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-8-7-15-17-86)

### தும்பளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர் காலையில் சடலமாகக் காணப்பட்டார் என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

தும்பளை பிரதான வீதியில் மணல் ஒழுங்கைக்குச் சமீபமாக வீதியோரத்தில் இரத்த வெள்ளத்தில் சடலம் காணப்பட்டது. பருத்தித்துறை நீதிவான் கே.அரியநாயகம் சம்பவ இடத்திற்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டார். பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சடலத்தை ஒப்படைக்குமாறு அவர் உத்தரவிட்டார்.

பிரேத பரிசோதனையை வல்வை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே.மயிலேறும் பெருமாள் நேற்றுமாலை நடத்தினார். சடலத்தில் கூரிய ஆயுதத்தினால் வெட்டப்பட்ட பத்துக்கும் மேற்பட்ட காயங்கள் காணப்பட்டன என்று கூறப்பட்டது.

இதேவேளை -

இவரது சடலத்துடன் காணப்பட்ட அட்டை ஒன்று 'தேசவிரோதச் செயலில் ஈடுபட்டமைக்காக இந்தத் தண்டனை வழங்கப்படுகிறது. மேலும் இருவருக்கு இவ்வாறு தண்டனை வழங்கப்படும்' என்று எழுதப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இக்கொலை தொடர்பாக பருத்தித்துறை பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ஐ-173-70-15-78-86)

### வெள்ளைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வற்றுக்குச் சென்று வெள்ளைக் கொடிகளைப் பறக்கவிடுமாறு கேட்டுள்ளனர்.

படையினரின் உத்தரவை அடுத்து நேற்று இந்தப் பகுதிகளில் வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களில் வெள்ளைக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன.

(ஐ-3-7-17-180)

### பேச்சை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சந்திப்பின் போது அமைச்சர் மங்கள சமரவீர விளக்கமளித்துள்ளார். இந்தச் சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட அமைச்சர் மங்கள மேலும் கூறியதாவது:-

விடுதலைப் புலிகளுடன் போருக்குச் செல்லும் உத்தேசம் ஏதும் அரசாங்கத்திற்கு இல்லை. இணக்கப்பாடு காணும் முயற்சியில் அரசுக்கு நம்பிக்கை இருப்பதால் அரசு போரை விரும்பவில்லை. அமைதிப் பேச்சுகளை நடத்த வருமாறு புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆறு தடவைகள் விடுதலைப் புலிகளுக்கு அறிவித்துள்ளார்.

முதலில் நாம் பேச்சு மேசையில் அமர்ந்து போர்நிறுத்த ஒப்பந்தம் குறித்துப் பேசவேண்டும். பின்னர் அமைதி முயற்சிகளுக்கான இணக்கப்பாடுகள் பற்றிப் பேசலாம். இதனை எமது அண்டை நாடான இந்தியா மற்றும் எமது நாட்டிற்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகள் ஏற்கின்றன.

பேச்சுகளை நடத்துவது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகளில் அரசாங்கம் மிகுந்த நெகிழ்வுப் போக்கை கடைப்பிடித்து வருகிறது. உலகத்திலேயே சுய கௌரவமுள்ள எந்தவோர் அரசும் எம்மைப்போல் நெகிழ்வுத் தன்மையுடன் இருப்பார்களா என்பது தெரியவில்லை. பேச்சுகள் ஆரம்பமானால் பேச்சுடன் தொடர்புடைய எல்லா விடயங்களிலும் அரசு நெகிழ்வுத் தன்மையைக் கடைப்பிடிக்கும்.

இப்போது புலிகள் அமைதி முயற்சியிலும் ஜனநாயகத்திலும் தமக்கிருக்கும் அக்கறையை உலகுக்கு வெளிப்படுத்த வேண்டும். இணக்கத் தீர்விற்கான அவர்களின் நேர்மையை வெளிப்படுத்தவேண்டும்.

- இவ்வாறு கூறினார் அமைச்சர் மங்கள சமரவீர.

(ஐ-க)

### கோப்பாயில் குண்டுச் சத்தம்

கோப்பாய் பொலீஸ் நிலையத்தை அண்டிய பகுதியில் நேற்று மாலை 4.30 மணியளவில் குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

இதனால் அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டது. இருபாலை, கோப்பாய், கல்வியங்காடு பகுதிகளில் உடனடியாக கடைகள் மூடப்பட்டன; வீதிகள் வெறிச்சோடின.

அப்பகுதியில் குண்டு ஒன்றைப் படையினர் செயல் இழக்கச்செய்தபோதே இந்தச் சத்தம் கேட்டதாக ஒரு தகவல் தெரிவித்தது.

இதேவேளை - கொக்குவில் சந்திப் பகுதியில் படையினரை இலக்குவைத்து நேற்று மாலை 6 மணியளவில் கிரனேட் வீசப்பட்டது. எனினும் அது வெடிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3-180-17)

### யாழ். தினக்குரல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அளவில் 'தினக்குரல்' அலுவலகத்தில் சோதனை நடத்தப்பட்டிருக்கிறது.

அலுவலகத்தில் தங்கியிருந்த ஊழியர்களையும், ஊடகவியலாளர்களையும் வெளியேற்றிய படையினர் அங்கு செய்திப்பிரிவு, அச்சுப்பிரிவு, நிர்வாகப்பிரிவு, விளம்பரப் பிரிவு ஆகிய எல்லா இடங்களிலும் சோதனை நடத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் ஊடகத்துறையின் சுதந்திரமான செயற்பாட்டுக்கு தடைபோடும் படையினரின் அத்துமீறல் நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று என்று ஊடகவியலாளர்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-12)

### உடுவிலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மல்லாகம் மாவட்ட நீதிவான் சடலத்தை பார்வையிட்டு பிரேத பரிசோதனைக்காக யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

மரண விசாரணை, பிரேத பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

(ஐ-86-15)

### கண்காணிப்புக்.

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இ.இமையவனும் கலந்துகொண்டார். இந்தச் சந்திப்பின்போது போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் புலிகள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் வருமாறு:-

- ஸ்ரீலங்கா அரசாங்கத்தினதும், உயர் படை அதிகாரிகளினதும் ஒப்புதலுடனும் ஸ்ரீலங்காப் படையினர் மேற்கொள்ளும் கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தினால் முதியோர், பெண்கள், சிறுவர்கள் என 40 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். 01.12.2005 தொடக்கம் 05.01.2006 வரையான ஒருமாத காலப்பகுதிக்குள் மட்டும் 22பேர் கொல்லப்பட்டுள்ளனர்.
- சுற்றிவளைப்பு, தேடுதல் என ஸ்ரீலங்காப் படையினர் மேற்கொள்ளும் தேடுதல்களின் போது பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளாகின்றனர். கடந்த ஒரு மாத காலப்பகுதிக்குள் இதுபோன்ற 6 சம்பவங்கள் வெளிவந்துள்ளன -
- கைதுசெய்யப்பட்டு கடத்தப்படும் அப்பாவிப் பொதுமக்கள் குறித்த எவ்வித தகவல்களும் வெளிவராது காணாமற்போவது அன்றாட நிகழ்வாகிவிட்டது. இதுவரை 45 இற்கும் மேற்பட்டவர்கள் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போயுள்ளனர் என்ற விவரங்கள் கிடைத்துள்ளன -
- சிறுவர்கள் கொல்லப்படுவதும், அச்சுறுத்தப்படுவதும் படையினரது அடாவடித்தனங்களில் ஒன்றாக உள்ளது -
- சுதந்திரமான போக்குவரத்திற்கு இடர் ஏற்படுத்தும் வகையில் இராணுவ நோக்கில் வீதித் தடைகளை ஏற்படுத்துவதால் பொதுமக்கள் வெள்ளங்கள் நிறைந்துள்ள சுற்றுவழி வீதிகளை நாடவேண்டியுள்ளது. உதாரணமாக வரணிப் பகுதியில் கொடிகாமம் - பருத்தித்துறை வீதி -
- வலி.மேற்கு, வடமராட்சி வடக்குப் பிரதேசங்களில் கடற்றொழில் செய்வதற்கு இராணுவத்தினர் தடைவிதித்து அதுபற்றி வெளிப்படையாகவே கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அறிவித்துள்ளனர். இதனால், பல மீனவக் குடும்பங்கள் பசி, பட்டினியை எதிர்நோக்கியுள்ளன -
- படையினர் பொதுமக்களைக் கொண்டு வீதியோர வேலி, மரங்களையும், பனைகளையும் கட்டாயப்படுத்தி தறிக்கின்றனர். அடையாள அட்டைகள், கையடக்கத் தொலைபேசிகள், உடைமைகள் மக்களிடம் இருந்து படையினரால் பறித்தெடுக்கப்படுகின்றன -
- வர்த்தகர்களது கடைகள் உடைக்கப்பட்டு பொருள்கள் கொள்ளையிடப்படல் -

படையினரது இந்த அத்துமீறல்கள் நிறுத்தப்பட்டு, மக்களின் இயல்புவாழ்வு திரும்புவதற்கு போர்நிறுத்த உடன்படிக்கை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும். அதற்கு கண்காணிப்புக் குழு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி வலியுறுத்தினார்.

(ஐ-12)

நிரு
கோண்டாவில்
A/L 2008
கலைப்பிரிவு
ஜனவரி - 8
காலை 7 மணி
Eco. சன்
H.C. சிவமகாலிங்கம்
Ta. லிங்கம்
Log. சயந்தன்
Go. வேலா
Dra. கணேஷ்
Po.Sci இளங்கோ
His. தயாகரன்
(45102)

உடனடி வேலைவாய்ப்பு
(சி/47259)
✱ தையல் வேலை தெரிந்த பெண்கள்
✱ பயிற்றுநர்கள்
உடன் தேவை
கௌரவமான சம்பளம் வழங்கப்படும். நேரில் வரவும்
தம்பு கமலேஸ்வரன்
ஆகாஸ் கார்மென்ஸ்
காளிகோவில் வீதி, மீசாலை மேற்கு, மீசாலை.
தொ.பே. 0776701495

COLLEGE OF ENGLISH
பிரவுண் வீதி, யாழ்.
Spoken English with Grammar
By:- THANENDRAN
புதியது இன்று ஆரம்பம்
Batch - 13.30
(Sat. Sun) 04.30

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) [illegible] கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.01.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org